அனைத்து உலகின்

மார்ச், 1926

72
211, N15AB
N26.11.9
169837.

March, 1926. குரோதன௵ பங்குனி௴

REGD. NO M.1190.

137

ANANDA BODHINI.

Vol. 11. பொருளடக்கம். No. 9.

		பக்கம்
1.	கடவுள் வணக்கம்	... 337
2.	அரும்பொருள் விளக்கம்	... 338
3.	தற்கால மகத்துவம்	... 340
4.	செல்வமும்—வறுமையும்	... 344
5.	நாலடியார் வசனம்	... 347
6	ஆரிய சித்தாந்தம்	... 350
7.	காலமும் அதன் கோலமும்	... 353
8.	ஓர் சந்தேகம்	... 357
9.	ஊழ் வலிதா? முயற்சி வலிதா?	358
10.	ஆத்திசூடி உதாரணக் கதைகள்	360
11.	சகாப்த வருஷங்களின் சந்தேக நிவிர்த்தி	... 362
12.	சனிபகவான்நிலையும் பஞ்சாங்க வித்தியாசமும்	... 363
13.	சொல் வன்மை	... 365
14.	நமெழுத்தலங்கார விடை	... 370
15.	பகவத்கீதை வசனம்	... 371
16.	அம்பாலிகை	... 373
17.	பொது சமாச்சாரங்கள்	... 375
18.	பஞ்சாங்கம்	... 376
	விளம்பரங்கள்	

"ஆனந்தபோதினி"

சந்தா விவரம்.

		ரூ. அ. ப.
வருடம்1-க்கு தபாற்கூலி யுள்பட	இந்தியா, பர்மா, ஸிலோன்	1—0—0
	பினங், ஸிங்கபூர், தென்ஆப்ரிகா, பசரா, மெசபொடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு	1—4—0
நடந்துகொண் டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை		0—2—0
சென்ற வருடங்களுடைய தனிச் சஞ்சிகை விலை		0—3—0

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

---

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் **பூரணமாய்ப் பெயரை** எழுதியனுப்பவேண்டும்.

(2) சந்தா தொகையை முன்னுடி செலுத்தியாவது அல்லது வி.பி. யில் பணம் கட்டியாவது பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமாத முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடிமாத சஞ்சிகை முதல், சேர்த்தனுப்பப்படும்.

(3) சஞ்சிகை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ 2-அணுவோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணு வாகையால்) வி. பி. கமிஷன் 2-அணு வி. பி.க்கு தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-4-6 அதாவது 5-அணு சேர்த்து ரூபா 1-5-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினுல் 1-2-0 மட்டுமேயாகும். ஆதலால் முன்னுடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம். **இதைக் கவனிக்கவும்**

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம் தேதிவரையில் பார்த்து அதற்குமேல் **அதே தமிழ்மாத முடிவிற்குள்** தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் கிரையமனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் **அடுத்த** சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

(6) **சந்தா நம்பரைக்** குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப் படமாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் **ரீப்ளை கார்டாவது தபாற்பில்லையாவது** அனுப்பினுலன்றி விடையளிக்கப்பட மாட்டாது

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் உண்மைப் பெயருடன், மததூஷணை, பிறர் தூஷணை, துரைத்தன விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியனவாகவும் எழுதவேண்டும். வியாசங்களைத் திருத்தவும், அவற்றிலுள்ள சில விஷயங்களைக் குறைக்கவும், கூட்டவும், அவற்றைப் பிரசுரிக்காமல் நிறுத்தவும் நமக்கு பாத்தியமுண்டு. எவ்வித காரணத்தைக்கொண்டும் வியாசங்கள் திருப்பியனுப்பப்படமாட்டா. வியாசக்காரர் அபிப்பிராயங்கட்கு நாம் பொறுப்பாளியாகோம்.

Life Subscription ஜீவிய சந்தா	இந்தியா, பர்மா, சிலோன்	ரூபா	15—0—0
	அன்னிய நாடுகளுக்கு	,,	20—0—0

நா. முனிசாமி முதலியார், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேசமேஸ்திரி தெரு, தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.

418 / 2-26 (137)

கடந்த வருடங்களைக் காட்டிலும் இவ்வருடப் பஞ்சாங்கத்தில் அனேக விஷயங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

64 பக்கங்கள் கொண்ட

அக்ஷய வருஷத்திய

(நேத்திர ஜீவநக்ஷத்திராதி சாந்திர ஸௌரவமான)

சர்வமுகூர்த்த

"ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கம்"

நமது வானசாத்திரக் கணிதத்திலும், ஆங்கில வானசாத்திரக் கணிதத்திலும் திறமை வாய்ந்த, ஸ்ரீமான் C. G. இராஜன் பி. ஏ. அவர்களால் (B. A. Mathematics) இப் பஞ்சாங்கம் சுத்தமாகக் கணிக்கப்பட்டது.

சிறுவர்களும், ஸ்திரீகளும் சுலபமாக அறிந்து கொள்ளும்படி திதி நக்ஷத்திரங்களின் நாழிகையோடு, மணி நிமிஷமும் பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இதில் பஞ்சாங்கத்தில் இருக்க வேண்டிய, நேத்திரம், ஜீவன், அமிர்தாதி யோகங்கள், விவாக சக்கிரம், அகஸ் இராசியிருப்பு, விரதாதி விசேஷங்கள், தசா புத்தி, கிரக சாரங்கள், தசவிதப்பொருத்தங்கள், சகுனங்கள் முதலியவைகளோடு, நவநாயகர்கள் பலன் முதலிய வேறு விஷயங்களும் சேர்க்கப்பட்டு சோதிடர்களும் மற்றவர்களும் எளிதில் அறிந்து கொள்ளும்படி சோதிட பொது விஷயங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவ்வருஷம் விசேஷமாக ஜோதிடர்களுக்கு மிகவும் உபயோகமாயுள்ள நட்சத்திர ஓரை, சந்திர உதையம், கிரக உச்சம், நவக்கிரக கிராயண சுத்த ஸ்புடமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.   *பஞ்சாங்கம் 1-க்கு விலை அணா 2.*

6-பஞ்சாங்கங்கள் 0—8—0.   *12-பஞ்சாங்கங்கள் 0—14—0.*

தனி பஞ்சாங்கம் வேண்டுவோர் விலையோடு தபால்கூலி ½ அணா சேர்த்து தபால் பில்லைகளாக அனுப்பவும்.

25 பஞ்சாங்கங்கள் வேண்டுவோர் ரூ. 1—10—0 முந்தி அனுப்பிவிட்டு தங்களுக்கு சமீபமான இரயில்வே ஸ்டேஷன் தெரிவித்தால் பார்சலாக அனுப்பிவிடுவோம். இரயில் சார்ஜ் நீங்கள் கொடுத்து பெற்றுக்கொள்ளவேண்டும்.

வியாபாரிகளுக்கு "இந்த ஆனந்தபோதினி பஞ்சாங்கம் விற்கப்படும்" என்று பெரிய எழுத்தில் போர்டும் அனுப்பப்படும்.

☞ எமது பஞ்சாங்கமும் புஸ்தகங்களும் எல்லா ஊர் புத்தக வியாபாரிகளிடத்திலும் எல்லா ரெயில்வே (Higginbotham) புக்ஸ்டால்களிலும் கிடைக்கும்.

6-ம் நெ. 28-ம் நெ. பஞ்சாங்கங்கள்.

தனலக்ஷ்மி கம்பெனியாரால் வெளியிடும் 28-ம் நெ. 6-ம் நெ. பஞ்சாங்கங்களும் எமது அச்சுக்கூடத்திலேயே நல்ல விதத்தில் பதிப்பிக்கப்பெற்றிருக்கின்றன.

பஞ்சாங்கம் 1-க்கு அணா ½.

6-பஞ்சாங்கம் அணா 2½.   *12-பஞ்சாங்கம் அணா 4.*

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167 மதராஸ்.

ஸ்ரீ

ஸ்ரீமத் கம்பராமாயண

வசன சங்கிரகம். (மூன்றும் பதிப்பு.)

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் ஆர்ட்பேப்பரில் போட்டு உள்ளே சேர்க்கப்பட்டிருப்பதோடு, மேல் காலிகோ பைண்டு முன் பக்கத்திலும் டை படம் மிக அழகாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது

மிக்க திருத்தங்களோடு உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. விலை ரூபா 2.

☞ இதன் முதல் இரண்டு பதிப்புக்களும் மிக விரைவில் செலவாகி விட்டபடியால் இம்மூன்றும் பதிப்பு இப்போது வெளிவந்துள்ளது. இப்பதிப்பிலும் சொற்பக் காப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் இப்பதிப்பு புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக் கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாம் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக் கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷ முண்டாகும். இங்ஙனம் இவையுண்டாகுமென்பதை,

“நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலை யிராமன் தோள்வலி கூறுவோர்க்கே”

என்னும் பாடலால் தெரிந்துகொள்ளலாம். இன்னும் இதனைப் படிப்பதன் மூலம் ராம என்ற நாமம் அடிக்கடி நாவில் வருவதனால், அதனைச் சொல்வார்க்கு நன்மையும் செல்வமுமுண்டாகும்; தீமையும் பாவமும் சேரமாட்டா; ஜனனமரணங்கள் நீங்கிவிடும். இவ்விவரங்களை,

“நன்மையுஞ் செல்வமு நாளு நல்குமே
தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே
சென்மமு மரணமு மின்றித் தீருமே
இம்மையே ராமவென் றிரண் டெழுத்தினால்”

என்னும் செய்யுளால் உணரலாம். இன்னும் இந்த இராமகதையை சிரந்தத்திலாவது, தமிழிலாவது, தெலுங்கிலாவது, கன்னடத்திலாவது, வேறு பாஷைகளிலாவது படிக்கக்கேட்பவர் தேவராய்ப் பிறந்து சுவர்க்க இன்பத்தை அனுபவிப்பார்கள்; இதனை,

“வடகலை தென்கலை வடுகு கன்னடம்
இடமுள பாடையா தொன்றி னாயினும்
திடமுள ரகுகுலத் திராமன் றன்கதை
அடைவுடன் கேட்பவ ரமர ராவரே”

என்னும் கவியால் தெரிந்துகொள்ளலாம். இன்னும் இந்த இராமாயணத்தில் வரும் கதைகளில் ஒன்றைப் படித்தவர்களும், கேட்டவர்களும், இது நல்லதென்று சொன்னவர்களும் நரகத்திற் சேரமாட்டார்கள். இதனை

“வென்றிசே ரிலங்கை யானை வென்றமால் வீர மோத
நின்ற ராமாயணத்தி னிகழ்ந்திடு கதைகள் தம்மில்
ஒன்றினைப் படித்தோர்தாமு முரைத்திடக் கேட்டோர் தாமும்
நன்றிது வென்றோர் தாமு நரகம தெய்தி டாரே.”

என்னும் பாட்டு உறுதிப்படுத்திக் கூறுகின்றது. இஃதன்றி இராமாயணத்தில் ஒரு அடியை நாவினால் சொல்லுகின்றவர்களும் பிரமலோக பதவியை அடைந்து அங்கே நெடுநாளிருந்து பின்னர் என்று மழியாத பரமபதத்தினை யடைவார்கள். இவ்விவரத்தை,

“இராகவன் கதையி லொருகவி தன்னி லேகபா தத்தினை யுரைப்போர்
பராவரு மலரோ னுலகினி லவனும் பன்முறை வழுத்தவீற் றிருந்து
புராதன மறையு மண்டர்பொற் பதமும் பொன்றுநா ளதனினும் பொன்
அராவணை யமல னுலகெனும் பரம பதத்தினை யணுகுவ ரன்றே” [று

என்னும் செய்யுள் விளக்கிக்காட்டும். இன்னும் 'இந்த இராமசரித்திரத்தைக்கேட்டு மறவாமல் மனத்தில் வைப்பவர்க்கு, அன்னதானம், பூமிதானம், கன்னிகாதானம், கோதானம், சொர்ணதானம் முதலிய பலதானங்களைச் செய்தபலன் சித்திக்கும். இவ்வாறு பயனுண்டாகுமென்பதை,

“அன்ன தான மகிலநற் றானங்கள்
கன்னி தானங் கபிலையின் தானமே
சொன்ன தானப் பலனெனச் சொல்லுவர்
மன்னிராம கதைமற வார்க்கரோ”

என்பதால் ஐயமற அறிந்துகொள்ளலாம். இன்னும் இந்தப்புண்ணியகதை முழுவதையும் எழுதிவைத்தவர்களும், கொண்டாடினவர்களும், கற்றுக் கொண்டவர்களும், இதனைப் பாராயணஞ் செய்பவர்க்கு மிகுந்த பொருளைக் கொடுத்துக் கேட்பவர்களும் இப்பூவுலகத்தில் சக்கரவர்த்திகளாகியிருந்து முடிவில் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் வாசஸ்தானமாகிய வைகுண்டத்தையடைந்து மாறாத இன்பமனுபவிப்பார்கள். இவ்விவரம்,

“இனையநற் காதைமுற்று மெழுதினோர் வியந்தோர் கற்றோர்
அனையது தன்னைச் சொல்வோர்க் கரும்பொருள் கொடுத்துக்கேட்போர்
கனைகடற் புடவிமீதே காவலர்க் கரசாய் வாழ்ந்து
வினையம தறுத்து மேலாம் விண்ணவன் பதத்திற் சேர்வார்”

என்பதால் உணரப்படும்.

இன்னும் இந்த இராமாயணத்தைப் பக்திபுடன் படித்து முடிக்குமிடங்களில் கலியாணம் முதலிய மங்களகாரியங்கள் நிறைவேறும்; புத்திரபாக்கிய முண்டாகும்; பசு, பால், தானியம் முதலியன விருத்தியாகும்; பில்லி, சூனியம், தீராதநோய், பூதபைசாச உபத்திரவங்கள் முதலியவை நீங்கும்; பகை நீங்கும்; விஷஜெந்துக்கள் அணுகமாட்டா; பஞ்சம் நீங்கும்; நல்ல மழை பெய்யும்; துக்கமான சம்பவங்கள் நீங்கி மிக்க ஆனந்தமுண்டாகும். இவையெல்லாம் உண்டாவது நிச்சயம். இராமாயணம் படித்த பற்பல இடங்களில் இப்பயன்கள் உண்டாகியிருக்கின்றன. இவற்றை ஒவ்வொருவரும் அனுபவத்திலும் உணர்ந்துகொள்ளலாம்.

இத்தகைய மகாமகிமைவாய்ந்த இராமாயணத்தை, வான்மீகர் ஆதியில் கிரந்தத்தில் சுலோகங்களாகச் செய்தார். பின்னர் பற்பல பாஷைகளிலும் சிறந்த வித்வான்கள் பற்பல விதங்களாகச் செய்யுளாகவும், வசனமாகவும் செய்திருக்கின்றனர். அவற்றை ஆங்காங்குள்ள பக்திமான்களும், கலை விருப்புடையாரும் ஓதியுணர்ந்தும், பிறரால் ஓதக் கேட்டுணர்ந்தும் இராமர் கிருபையால் இம்மை மறுமைப் பயன்களை அடைந்து

வருகின்றார்கள். மேற்கூறிய பலவகை இராமாயணங்களில் வடமொழிச் சுலோகங்களால் வான்மீகரால் செய்யப்பட்டதும், தமிழ்ச் செய்யுட்களால் கம்பரால் செய்யப்பட்டதும், தென்னிந்தியாவில் சமஸ்கிருத விற்பன்னர்களாலும் தமிழ் விற்பன்னர்களாலும் மிகுதியும் கொண்டாடப்பட்டு வருகின்றன. எனினும், அவை வடமொழியிலும் தென்மொழியிலும் சிறந்த கல்வியாளர்க்கன்றி மற்றையர்க்குப் பயன்படாமையின், சாமானிய படிப்புள்ளவர்க்கும் உபயோகப்படுமாறு, சில புலவர்கள் வான்மீகி இராமாயணத்தைத் தமிழில் மொழிபெயர்த்தும், கம்பர் இராமாயணத்தை வசனமாக எழுதியும் வெளியிட்டிருக்கின்றனர். அவற்றுள் வான்மீகி இராமாயண மொழிபெயர்ப்பு விசேஷமான வடமொழிகள் கலக்கப்பட்டு மணிப்பிரவாள நடையில் அமைந்திருப்பதாலும், அதிக விலையுள்ளதாயிருப்பதாலும் சாதாரண தமிழ் மக்கள் அதனை வாங்கிப் படிக்கும் ஆற்றலின்றிக் கம்பர் இராமாயண வசனத்தையே மிகுதியும் வாங்கி ஆங்காங்கே பாராயணம் செய்து வருகின்றார்கள். நாட்டுப் புறங்களிலுள்ள சில கிராமவாசிகளும் அதனை வாங்கி இராமர் படத்துக்கு முன்னிலையில் அதிர்தோரைக்கொண்டு தொடங்கி பக்தியுடன் படிக்கச்செய்து முடிப்பித்து முடிவில் இராமர் பட்டாபிஷேக மகோற்சவங் கொண்டாடி வருகின்றார்கள். இவ்வாறு கொண்டாடப்பட்டு வரும் அந்த இராமாயண வசனமும் நாளடைவில் சில புத்தக வியாபாரிகளால், அளவற்ற பிழைகள் செறிந்ததாகவும், 'விஷயங்கள் முன் பின்னாக மாறுபட்டதாகவும், வந்த விஷயங்களே திரும்பவும் வரக்கூடியதாகவும் சின்னாபின்னப்பட்டு அதிக விலையில் வெளிவருகின்றது. அதனால் தமிழ்மக்கள் அப்பிழைப் புத்தகங்களையே படித்து விஷயங்களை மாறுபாடாக உணர்ந்து இடர்ப்படுகின்றனர். ஆதலின், அந்தக் கம்பர் இராமாயண வசனத்தைக் கூடியவரை சீர்திருத்திப் படிப்பார்க்கு அயர்ச்சியுண்டாகுமாறு அளவின்றி விரிக்கப்பட்டிருக்கும் விசேஷ வர்ணனைகளைத் தள்ளிச் சிறிது சுருக்கமாகவும், விளக்கமாகவும் குறைந்த விலையில் அமைந்ததாகவும், பலர்க்கும் பயன்படக் கூடியதாகவும் வெளிப்படுத்தி யிருக்கின்றோம்.

இது, பெரும்பான்மையும் கம்பர் இராமாயணச் செய்யுட்களின் போக்கைத் தழுவியே தெள்ளிய நடையில் எழுதப் பெற்றிருக்கின்றது. இராமாயண பாராயணஞ் செய்ய விரும்புவோரும், சாதாரணமாக இராமர் கதையைப் படித்துணர விரும்புவோரும், வித்தியார்த்திகளாகிய மாணவர்கள், மாணவிகள், மற்றைய ஆண்மக்கள், பெண்மக்கள் முதலிய எல்லோரும் இதனை எளிதில் படித்துணரலாம்.

இது, சங்கிரகமாக எழுதப்பட்டிருப்பினும் இதில் சரித்திரம் எவ்வளவும் குறைக்கப்படவில்லை. கிளைக்கதைகள் ஒன்றேனும் குறையாமல் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கம்பர் இராமாயணச் செய்யுட்களும் அவசியமானவிடங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கிரௌன் 16 பேஜ் சைசில் 692 பக்கங்களில் இப்புத்தகம் அச்சிடப்பட்டிருக்கிறது. பெரிய கம்ப இராமாயண வசனத்தைப் பாராயணம் செய்வதுபோலவும் இதனை பக்தியுடன் தினந்தோறும் பாராயணஞ் செய்யலாம்; வெளியிற் செல்லுமிடங்களிலும் படிப்பதற்குச் சுலபமாக இதனைச் சட்டைப் பையில் வைத்துக்கொண்டுபோகலாம். இதுவரையில் பலவகை இராமாயணங்கள் வெளிப்பட்டிருந்தபோதிலும் இதைப்போன்ற இராமாயண புத்தகம் வெளிவரவில்லையென்று உறுதியாகச்சொல்லலாம். இஷ்டகாமியங்களை உடனுக்குடனளிப்பது இதுவே என்பது அநுபவமாதலால் இதன் பெருமையை விரித்துரைக்கவேண்டுவதநாவசியம்.

விலாசம் :—"ஆனந்தபோதினி" ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

கைவல்ய நவநீதவசனம்

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும்பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருளைத் தழுவிப் பல மகான்கள் பல நூல்களை இயற்றியிருக்கின்றனர். அவற்றுள் ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இது, எவரும் எளிதில் வாசித்துணரும்படி வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்திமார்க்கத்தை எவரும் நன்குணரலாம். இதன் விலை ரூபா 1—8—0.

பவளத்தீவு அல்லது குடும்பசாபம்.

நமது மனமோகினி சஞ்சிகையில் பிரதி மாதமும்வெளியாகிக்கொண்டிருந்த மேற்படி நாவலின் 2-பாகமும் (நமது சந்தா நேயர்களின் கோரிக்கையின்படி)புத்தக ரூபமாக வெளியிடப்பட்டிருக்கின்றன. இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும், ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். 2-பாகமும் ரூபா 3-0-0.

லோகநாயகி அல்லது அதிசயப் புதையல்.

பண ஆசை எத்தகைய பெரும்பாதகத்தையும் செய்யத் தூண்டும் கொடிய பேய் என்பதும், அக்கிரமஸ்தரும், நம்பினவர்களைத் துரோகம் செய்யும் பாதகரும் முடிவில் ஆண்டவனால் எப்படியும் தண்டிக்கப்படுவோர்கள் என்பதும், நீதியும் சத்தியமு முடையோர் முதலில் கஷ்டத்தை யனுபவித்தாலும் முடிவில் பூரண நன்மையை யடைவார்கள் என்பதும், இக்கதையில் நன்கு நிரூபிக்கப்படுகிறது. கதாநாயகியாகிய லோகநாயகியின் புத்தி சாதுர்யமான நடக்கைகளும், துப்பறிபவனது சாமார்த்தியமும், ஆரம்பத்திலிருந்தே ஒன்றின்பின் ஒன்றாக நேரிடும் அதிசய சம்பவங்களும், போய்விட்டதென்று யாவரும் கைவிட்டுவிட்ட பொக்கிஷத்தைத் துப்பறிபவன் எடுத்தளிக்கும் சாமார்த்தியமும் நீதியும், இதை வாசிப்போர்க்கு ஆதிமுதல் அந்தம் வரை வியப்பையும் உற்சாகத்தையும் அளிக்கும். விலை ரூ. 1.

தேவசுந்தரி.

இஃதோர் மகாப் பதிவிரதையின் அரிய சரித்திரமாகும். பதிவிரதைகளில் பல அளவுள்ளது. சிலருடைய பதிவிரதா தன்மை தன் கற்புத்தன்மையை மட்டுமே காப்பாற்றிக்கொள்ளும் இயல்புடையது. இவ்வித கற்புடையோர்க்கு புருஷத் தன்மைக்கொப்பாகிய தைரியமும் பொறுமையும் துணிகரமுமாகிய குணங்கள் வேண்டும். இதைப்போல் மிக்க சிலரே உலகில் இருப்பார்கள். தேவசுந்தரி, தனக்கு நேரிட்ட இக்கட்டைச்சகித்துக் கொண்டு தீயவழிகளிலிறங்கிய தன் புருஷனை ஆதரித்து கற்பின் தன்மையை விளக்கினது மிக்க வியப்பாயிருக்கும். இவள் கணவனுக்கு வரும் அந்த ஆபத்துகளை வெகு சாமர்த்தியமாய் நீக்கி நல்லவழியில் கொண்டு வந்த பிறகு இவள் மேன்மேலும் விருத்தி யடைந்தது புகழத்தக்கது. இந்நாவலில் ஆச்சரியத்தை விளைவிக்கும் சங்கதிகளும் நல்லறிவைப்புகட்டக் கூடிய விஷயங்களும் ஏராளமாய் செறிந்து கிடக்கின்றன. ரூபா 1-4-0

விலாசம்.—"ஆனந்தபோதினி ஆபீஸ்"
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

மஞ்சள் அறையின் மர்மம்.

இதுகாறும் எழுதிய பல துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இதனையும் வாசித்தால் இத்தகைய ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும் நாவல் இதுகாறும் எழுதப்படவில்லையென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச் செயல்களும், குற்றத்தைக் கண்டு பிடிப்பவனுடைய சாமர்த்தியச் செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றனவாகவேயிருக்கும். குற்றம் நடந்த இடத்தின் படங்களும் சேர்ந்திருக்கின்றன. விலை ரூ. 1—8—0

ஆனந்தலிங்

இலண்டன் சாமர்த்தியத் திருடர்கள் என்ற நாவலை வாசித்த நண்பர்களனைவரும் அதன் இனிமையை நன்குணர்ந்தே யிருப்பீர்கள். அதைப் போலவே இதிலும் பல துப்பறியும் கதைகள் அடங்கியிருக்கின்றன.

தைரியமும், துணிகரமும், மிக்க புத்தி சாமர்த்தியமும் நிறைந்த ஆனந்தலிங்கின் அதி யபூர்வச்செயல்கள் இதில் ஒரு விசேஷம். அதோடு இதில் அடங்கிய குற்றவாளிகள் நல்ல அந்தஸ்தி துள்ளவர்களும், கல்வியறிவுடையோருமாதலால் அவர்களுடைய மிக்க சாமர்த்தியமான இணையற்ற செய்கைகள் வாசிப்போர்க்கு மிக்க அதிசயத்தையும், பிரமிப்பையும் யோசனையையு மளிக்கும். 492-பக்கங்கள் கொண்டது. விலை ரூபா 2.

கனகபூஷணம்.

இதில் கற்பிலக்கணம் விஸ்தாரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அநேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுதுவாராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். சிறுவர்களுக்கு வேண்டிய நீதிகளும் நற்புத்திகளும் இதில் நிறைந்திருக்கின்றன. இந்த நாவல் ஆதிமுதல் அந்தம் வரையில் மனதை முழுதும் கவர்ந்து கொள்ளக்கூடியது. 2-பாகம் இதன் விலை ரூபா 3 8 0.

கற்கோட்டை.

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்து கொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும், துணிகரமான வீரச்செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க்காதல் கொண்ட உத்தம ஸ்திரீகள் தம்காதலர் பொருட்டாய், எவ்வளவு வரையில் ஆடவருக்குச் சமமாய் நடந்துகொள்ளச்சக்தியுடையவர்களா யிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும். நீதியைப் புகட்டும் ஓர் உயர்ந்த நூல். இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது. ரூபா 2.

கமலசேகரன்.

ஓர் சுத்தவீரனுடைய அதிசயக்கதை. இக்கதாநாயகன் உயர் குலத்தில் பிறந்தவனேயெனினும் தன் சிறிய தந்தையின் மோசச்செயலால் அனாதைப்போல் அன்னியரால் வளர்க்கப்படுவதும் பிறகு தன் தந்தையர்களின் ஆவேசங்கள் அவனெதிரிற்றோன்றி அவனுக்கு வேண்டிய சமயங்களிலெல்லாம் உதவி செய்வதும் மிக்க ஆச்சரியமாகவிருக்கும்.

இதில் அதிசயரசமும், சோகரசமும், வீரரசமும் உண்மைக்காதலின் அபூர்வ குணங்களும் நிறைந்திருக்கின்றன. இதன் விலை ரூபா 1 12 0.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஞானசெல்வாம்பாள்

அல்லது

இரண்டு சகோதரிகள். 4-பாகம்.

நம்மிடம் இதுவரை வெளியாகியிருக்கும் அநேகம் நாவல்களில் இது தான் மிகப் பெரியது. நூற்றுக்கு மேற்பட்ட பல அத்தியாயங்களையுடையது; "இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறுபோல்" படிப்போர் மனத்தை இழுத்துக்கொள்ளத்தக்கது. கதை மிகப் பெரிதாயினும், வாசகர்களின் மனம் சிறிதும் அயர்ச்சியடையாமல் மேலும் மேலும் ஆனந்தமாக முடிவுவரை சென்றுகொண்டேயிருக்கும். படிப்பவர்கள் இப்புத்தகத்தைக் கைவிடாதபடி ஆகாரமுண்ணுங் காலத்திலுங்கூட விரித்தபடியே பார்த்துக்கொண்டு சாப்பிடும்படி அவ்வளவு இனிமை இந்நாவலில் அமைந்திருக்கின்றது.

கதாநாயகிகளாகிய ஞானம்பாள்; செல்வாம்பாள் என்ற இரண்டு சகோதரிகளும், தங்களுக்கு மேலதிகாரிகளின்றித் தங்கள்இஷ்டம்போல் எங்குமுலவிச் சகல ஆடவர்களுடன் பழகிக்கொண்டிருந்ததால் அடைந்த பலவகைத் துன்பங்களும், வஞ்ச நெஞ்சர்களாகிய படுமோசக்காரர்களால் நிரபராதிகளாகிய பலர் பெரிய பெரிய விபத்துக்களுக்குள் சிக்கி மீள்வதும், பஞ்சமாபாதகர்கள் அஞ்சாமல் நல்லோர்க்கியற்றும் சஞ்சலச் செயல்களும், நெஞ்சு திடுக்கிடும் விஷயங்களும், முடிவில் தீயோர் பல ஆபத்துகளில் சிக்கி அடியோடொழிவதும், நல்லோர் சுகமடைவதும், இன்னும் எண்ணிறந்த பற்பல அற்புத விஷயங்களும் இதில் அடங்கியிருக்கின்றன. இன்னும் இக்கதையில் சம்பந்தப்பட்ட முக்கிய ஆடவர்களாகிய தேவராஜன், கிருஷ்ணராஜன், மச்சநாதர் முதலியவர்களின் அரிய செயல்கள், மனதிற்குப் பேராச்சரியத்தை விளைவிக்கும். விலை 4-பாகமும் ரூபா 8.

மதனம்பாள்

அல்லது மகா மாயக் களவு.

இது ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பெற்ற மிக்க அற்புதம் பொருந்திய நாவல்: இந்நாவல் படிப்போர் மனதைக் கவர்ந்து ஆனந்த சாகரத்தில் மூழ்கச் செய்யுமென்பதில் ஐயமில்லை. இதில், காளிங்கனாகிய லோகநாதன் என்னும் ஓர் நயவஞ்சகன் சகோதரத் துரோகியாய் அவனை அடுத்துக்கெடுத்தலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனம்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ்செய்துகொள்ள விரும்பி வேலாயுதன் என்பவனைத் தன் மோசச்செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக்கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனம்பாளை ஆதரித்து வந்த பாங்கிக்காரர் மனைவியாகிய விமலாபாயைப் பயமுறுத்தி, மதனம்பாளைத் தன் விருப்பத்திற்கிணங்கச்செய்வதும், பாங்கியில் மகா மாயக்களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன்மேல் சுமத்துவதும், இன்னும் அந்த லோகநாதன், பொருளாசையால் தன் தமையனாகிய சுஜேந்திரம் பிரபுவை விஷமிட்டுக் கொல்வதும், விமலாபாயைத் தீராத்துயரத்திற் குள்ளாக்குவதும், முடிவில், வரதராஜன் என்னும் துப்பறியும் நிபுணனால், அந்தச்சண்டாள லோகநாதன் குற்றங்கள் வெளியாக்கப்பட்டு அவன் தீபாந்தரவாச தண்டனையடைவதும், மேலும் இடையிடையே வரும் மகா மோசதந்திர அற்புதச் செயல்களும் படிப்போர்க்கு ஆச்சரியத்தை விளைவிக்கும்.

முதற்பாகம் விலை ரூ. 1—8—0. இரண்டாம்பாகம் விலை ரூ. 1—8—0.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

இரத்தினபுரி இரகசியம்.

இதில் மிக்க ஆச்சரியமும் நெஞ்சு திகைக்கக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருஷ்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய இல்லறசீல ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமாயிருக்கின்றனவென்று கூறுகிறோம். இரண்டு பாகமும் விலை ரூபா 4 0 0

அமராவதி அல்லது அதிசய மர்மங்கள்.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த ஒரு நாவல். ஒருமனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனாயிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம்பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துகளினும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதிலுள்ள ஒவ்வொரு சம்பவமும் அதியாச்சரியத்தை விளைத்து அடியோடு மனதைக் கவரத்தக்கதே. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகச் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். இதில்வரும் முக்கிய பாத்திரங்கள் ஒவ்வொருவருடைய சரித்திரமும் ஒவ்வொரு வியப்பான துப்பறியும் கதையைப்போன்றிருக்கும். சுருக்கிக் கூறின் இதை ஒரு அதிசயக் களஞ்சியமே யெனலாம். 2-பாகம் ரூபா. 4.

இந்திராபாய்

இதில் 5 ஆப்டோன் படங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது

இது ஒரு துப்பறியும் நாவல்: ஆனால் அநேகம் துப்பறியும் நாவல்களை விட இது மிக்க அபூர்வமானது. இதில் சம்பந்தப் பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்காம் என்ற கள்ளன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே செய்யும் மிக்க அபூர்வமானவையும், கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியானவையும், முதலில் அசம்பாவிதமாகத் தோற்றத் தக்கவையுமான பல கொலை களவுகள் மிக்க அதிசயமானவைகளாகவும் இதுகாறும் கேட்டிராத விதமான கதைகளாகவுமே யிருக்கும். விலை ரூபா 2—8—0

மூன்றும் பதிப்பு! **தினகரசுந்தரி** விலை ரூபா 1.

இக் கதாநாயகி ஆண் வேடந்தரித்து, தன் கணவனாகிய செல்வச் சீமானுடைய சோரச் செயலைக் கண்டுபிடிப்பது மிக்க வியப்பாயிருக்கும். அதிலும் இவள் மிக்க துஷ்டரான கள்ளரிடம் சிக்கிக்கொண்டு அவர்களைச் சாமர்த்தியமாய் ஏமாற்றிவிட்டுத் தப்பித்துக்கொண்டு வந்து விடுவது மிக்க வியப்பிலும் வியப்பாயிருக்கும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED)

தொகுதி	குரோதன௵ பங்குனி௴ ௧௳	பகுதி
11	1926௵ மார்ச்சு௴ 14௳	9

கடவுள் வணக்கம்.

ஐந்துவகை யாகின்ற பூதபே தத்தினு
லாகின்ற வாக்கை நீர்மே
லமர்கின்ற குமிழியென நிற்கின்ற தென்னநா
னறியாத கால மெல்லாம்
புந்திமகி ழுறவுண் டுடுத்தின்ப மாவதே
போந்தநெறி யென்றி ருந்தேன்
பூராய மாகநினை தருள்வர் துணர்த்தவிலை
போனவழி தெரிய வில்லை
எந்தநிலை பேசினு மிணங்கவிலை யல்லா
லிறப்பொடு பிறப்பை யுள்ளே
எண்ணினு னெஞ்சது பகீரெனுந் துயிலுறு
மிருவிழியு மிரவு பகலாய்ச்
செந்தழலின் மெழுகான தங்கமிலை யென்கொலோ
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்த குருவே. (1)

காதற்றுப் போனமுறி கட்டிவைத்தா லாவதுண்டோ
சீதற்ற காயமுமச் செய்கையே—போதமாய்
நிற்பரல்லா விச்சகத்தி னோரார்க ணோர்ந்திடினுந்
தற்பரமாக் கண்டிருப்பார் தாம். (2)

தத்துவப்பே யோடே தலையடித்துக் கொள்ளாமல்
வைத்த வருண்மோன வள்ளலையே—நித்தமன்பு
பூணக் கருதநெஞ்சு போற்றக் கரமெழும்புங்
காணத் துடிக்குமிரு கண். (3)

அரும்பொருள் விளக்கம்

1. பூத பேத மயமாகிய சரீரம் நீர்மேற் குமிழிபோல் நிலையற்றது. இந்த உண்மையை நாம் அறிந்துகொள்ளாதவரையில் நமக்குச் சிற்றின்ப நுகர்ச்சியே தலையெடுக்கும். இறைவன் திருவருளால் உண்மையை புணர்வோமாயின் 'அலங்கலிற் றோன்றும் பொய்ம்மை யரவு' போல் அந்நுகர்ச்சி நம்மைவிட்டுச் சொல்லாமலே யகன்றொழியும். பின்னர் வேறெப் போதனைக்கும் நமது மனம் இடந்தராது. மேலும் பிறப்பிறப்பின் கொடுமைகளை நாம் ஒரு சிறிதும் சிந்திப்பதில்லை. சாவதானமாய்ச் சிந்தித்துப் பார்ப்போமானால் நமது மனம் பகீரென்னும்; கண்கள் நித்திரை கொள்ளா; சரீரம் அனலிலிட்ட மெழுகுபோலுருகும். இச்செயல்கள் இந்நூலாசிரியர்பால் நிகழ்ந்தமையின், வைச்சியோபசாரமாய் அவர் 'அச்சாதனமின்றிய என்பால் அவ்வாறு நேர்வதற்கு யாதுகாரணம்; அஃதுன் திருவருளே' என்று இறைவனை நோக்கி இச்செய்யுளிற் கூறுகின்றார்.

ஐந்துவகையாகின்ற பூதமாவன—பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் முதலியன. பேதத்தினால் என்றதனால் தன்மாத்திரைகளாகிய சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐந்தினையும், அந்தக் கரணங்களாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கினையும், கன்மேந்திரியங்களாகிய வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்னும் ஐந்தினையும், ஞானேந்திரியங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்தினையும் கொள்ளல் வேண்டும். இவ்விருபத்துநான்கு தத்துவங்களும் உடலுக்கு இன்றியமையாதனவாதலின் 'ஐந்துவகையாகின்ற பூத பேதத்தினா லாகின்ற வாக்கை' என்றார். இவ்விருபத்துநான்கும் ஆன்ம தத்துவமாம். ஆன்மதத்துவங்களா லாக்கப்பட்ட ஆக்கை நிலையற்றதென்பார் 'ஆக்கை நீர்மே லமர்கின்ற குமிழி' என்றார்.

அறியாதகாலம்=பதிநூல்களை விசாரியாத காலம்.

பதிநூல்களை விசாரியாதகாலத்தில் அறுசுவை யடிசில்களை உண்ணுதலும், பஞ்சுபட்டாதி யாடைகளை யணிதலும், வனிதையராதியர் இன்பம் நுகர்தலும் அப்பிரயோசனமென எண்ணாமல் நிலையானவையென்று எண்ணி புழன்றேனென்பார், 'புந்தி மகிழுற வுண்டுடுத் தின்பமாவதே போந்தநெறி யென்றிருந்தேன்' என்றார்.

அருண்மேலிட்ட காலத்து, அவ்வருள் தலைமையாகவிருந்து யாவையும் [illegible] வந்த அருள் வியாபகத்தில் வியாப்பியமாகநின்ற எனக்கு மருள் [illegible] வையுந் தோன்றாது மறைந்தனவாகலின், 'அருள் [illegible]ணாதத விவைபோ[illegible]வழி தெரியவில்லை' என்றார்.

பிறக்கின்ற காலத்தில் கருப்பாசயப்பை உறுத்துதலினாலும், அதில் சலம் பூரித்தலினாலும், உ[illegible]ராக்கினி சுடுதலினாலும், பிரசூதவாயு மூரித்துத் தள்ளுதலினாலும், [illegible]யோனித்துவார நெருக்கத்தினாலும் மலையிறுத்திக்

[library stamp]

கொண்டதுபோலவும், கடலின்கீழ் வீழ்த்தி மிதித்தல்போலவும், இருப்புக் கடத்தி லடைத்து நெருப்பாற் சுடுதல் போலவும், மலைமேல் நின்றவனைத் தலைகீழாகத் தள்ளுதல் போலவும், ஆலையிலிட்ட கரும்பு நெருக்குண்டல் போலவும் வரும் துன்பங்கள் பலவாயிருத்தலினாலும், இறக்கின்றகாலத்தில் நாவும் இதழும் பற்களும் கறுத்திடவும், நெற்றியும் கண்டமும் வியர்த்திடவும், உடல் அல்லித்தண்டைப்போல் ஜில்லிடவும், முடிசாயவும், முகஞ் சோரவும், விழியிருளடையவும், நெடுமூச்சு வாய்வழிநின்றெழுந்து உடலை யலைக்கவும், நவத்துவாரமும் அடைந்து விக்கலுண்டாகித் தேகம் நடுங்கி மூர்ச்சை மேலாடி உயிர் சிதையவும் வருந்துன்பங்கள் பலவாயிருத்தலினாலும், 'இறப்பொடு பிறப்பையுள்ளே யெண்ணினால் நெஞ்சது பகீரெனுந் துயிலுறு திருவிழியு மிரவுபகலாய்ச், செந்தழலின் மெழுகானது' என்றார்.

பூராயம்=ஆதியந்தம்.
அங்கம்=சரீரம்.
சிரகிரி=சிராமலை—திரிசிரன் ஆட்சிபுரிந்த இடம்.

2. கட்டாகவுள்ள காதற்ற வோலைகள் எடுத்தாளுதற்கு எவ்வணம் உபயோகப்படாவோ அங்ஙனம் சிரவணஞானம் அடையப்பெறாத சரீரங்களும் பிரயோசனப்படா. ஆதலால் போதனைமயமாய் நிற்பவர் ஜீவன் முத்தர்களாவர்; தற்பரசொரூபமாகக் கண்டிருப்பவர் எல்லாவற்றையும் இறைவனாகப் பார்ப்பவர்கள் என்று இதிற் கூறுகிறார்.

காது=துளை.
மூறி=எழுதோலை.
காயம்=தேகம்.
போதமாய்=ஞானவடிவமாய்.
சேரார்=பொருந்தாதார்.

3. அநித்தியமான தத்துவங்களுடன் சம்பந்தித்துப் பிரபஞ்சமுகமாக இருந்து அவதிப்படாமல் அந்தர்முகமாகவிருந்து ஆனந்தாதீதத்தினை யனுபவிக்க அஜபா மந்திரத்தினை யுபதேசித்த ஆசாரியரை நினைக்குந்தோறும் தியானிக்கவும், கும்பிடவும், தரிசிக்கவும், மனம், கைகள், கண்கள் முந்துகின்றன என்று இப்பாடலிற் கூறுகின்றார்.

தலையடித்துக்கொள்ளாமல்=தலைமோதிக்கொள்ளாதபடி.

அருள்வைத்த=கிருபைபாலித்த.

கரம் எழும்பும்=கையெடுக்கும்.

துடிக்கும்=பதைக்கும்.

சந்தாதாரர்களுக்கு.—சந்தா நம்பர் தெரியாதவர்கள் மாத மாதம் வரும் சஞ்சிகையின் மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.

ஆனந்தபோதினி

குரோதன௵ பங்குனி௴ ௧௨

தற்கால மகத்துவம்.

பெரும்பான்மையும் வாசாலமான இடாம்பீக நடையே தற்கால மகத்துவமாக விளங்கிவருகிறது. பலர்க்குச் சுயானுகூலத்துள்ள கண்ணுங் கருத்தும் பரானுகூலத்தில் இல்லை. உதய ஸ்நானம், ஜெபம், காயத்திரி அவுபாசனம், ஓமம், கருமம், தவம், வேதாத்தியயனம், சுசி, ஆசார நியமம், தேவதாபக்தி முதலிய உரிமைப்பாடுகளை வேதியரிற் பலர் துராசாரமெனக் கருதிக் கைநழுவ விட்டுப் பொருளாசைகொண்டு, தம்மை வணங்கத்தக்கவரைத் தாம் வணங்கி யாசித்துத் தமது அருமையான காலத்தை வீணுக்குகின்றனர். அன்னோர் முகத்தில் தோன்றவேண்டிய பிரமதேஜசு மழுக்கமடைந்து வருகின்றது; பலிதமாகவேண்டிய அவர்கள் வாக்கும் பயனில் வாக்காய் முடிகின்றது. நவீன நாகரிகமென்னும் அனுசாரத்திற் றலையிட்ட அவர்கள், நல்லொழுக்கமாகிற பழமையை அநுசரித்துவரும் தங்களினத்தவரையுந் தூற்ற முற்படுகின்றனர்.

க்ஷத்திரியரிற் சிலர் நித்தியஸ்நானம், ஜெபம், நீதி, தருமம், தானம், தெய்வவழிபாடு முதலியவற்றிற் கவனஞ் செலுத்துவதை அறவே மறந்து, திரவியாபேட்சையிற் பெரிதுஞ் சிக்குண்டு, தன்னுயிர்போல மன்னுயிரைக் காக்கவேண்டுமென்கிற சிந்தையின்றி, எமன் உயிரைக் கவர்வதொத்து நிர்த்தாக்ஷண்யமாய்ப் பிறரை வருத்துகின்றனர்; பரஸ்திரீகமனமும் பரிந்து புரிகின்றனர். பெரியோர்களுக்கு வந்தனோபசாரஞ் செய்யப் பிரிய முறுகிறதில்லை. யாகாதி சத்கிருத்தியங்களை நினைப்பதில்லை. கொடுங்கோலாட்சியிற் குதுகலிக்கின்றனர். இதனால் மாத மும்முறை பெய்யவேண்டிய மழைவளம், முப்போகத்துக்குரிய பயிர்வளம், குடிவளம் முதலிய வளங்கள் குறைவுற்று, குடிகளுக்குத் துர்ப்பயம், துர்வியாதி, துர்

மரணம், கொலை, களவு, கள், காமம் அதிகரிக்கின்றன; மகான்கள் தவம், யாகம் செய்வதற் கனுகூலமின்றி, மிருகவுபத்திரவம் மிகுத்துச் சிரமப்படுகின்றனர். மற்ற வருணத்தவரிற் பலரும் தத்தமது கடமைகளிற் பிறழ்ந்திருக்கின்றனர்.

உலகில் பொய், பொல்லாங்கு, பகை, கெடுநினைப்பு, அசத்தியம், பிறர்பொருளிச்சித்தல் முதலிய அதன்மங்கள் பெருகுகின்றன. கிழங்கு முதலிய சகல வஸ்துக்களும் சுவையற்றுப் போகின்றன. ஜலம் வெப்பமாய் உப்புத்தன்மை யடைந்துவிடுகின்றது. கறவைகளுக்குப் பால்வளம் வறட்சியாகின்றது. சகலருக்கும் மனோவியாகூலம் மேற்படுகின்றது. மேற்குலத்தோர் இழிவான தொழில் புரிந்து ஜீவிக்கவேண்டியவர்களாகின்றனர். தெய்வநிந்தை ஏற்படுவதுடன் விரதம், நோன்பு, பிதுர்கன்மம் என்பவை யாவும் பொய் என்ற வதந்தி பரவுகின்றது; இவற்றை அனுஷ்டிக்கும் புண்ணிய சீலருக்கு எளனமே பரிசாகின்றது.

"உண்பதும் உறங்குவதுமே உத்கிருஷ்டம்; தானதருமம், பரோபகாரம், தயை, சாந்தம், பொறுமை, ஜீவகாருண்யம் முதலியவற்றால் வரும் பயன் யாதுமில்லை. இவையாவும் வெளிவேஷக்காரரின் வீண்செயல்கள். அறியாமையால் மடாலயங் கட்டுவது சோம்பற்றன்மை வாய்த்தவர்களுக்கே வாசஸ்தலமாகின்றது; கோவில், குளம், தீர்த்தம், திருநாள் இவற்றைக் கொண்டாடுவோர் அயோக்கியரே. தாய், தந்தை, அண்ணன், தம்பி, சுற்றம், ஆசான் என்பவர்கள் நம்மைப் போன்றவர்களன்றோ? அவர்களுக்கு நாம் மரியாதை செய்யவேண்டும் என்பது ஞாயந்தானா? பரஸ்திரீ மக்களுக்கே சகல வுரிமைகளுமுண்டு. அக்கினிசாக்ஷியாய் வேதியர், பந்துக்கள், சால், காகம், அரசாணி முன்னிலையில், பிரமாணரீதியில், மணம் பூண்ட குலஸ்திரீகளுக்கு யாதொரு பாத்தியமுங் கிடையாது" என்று குதர்க்கமிடுவோர் பெருகிவருங்காலமா யிருக்கிறது தற்காலம்.

பலர் தருமசொரூபிகள்போல் நடித்துப் பிறருக்கு இடுக்கண் தேடுவர்; தெய்வ சொத்துக்களை அபகரிப்பதற்குப் பின்வாங்கமாட்டார்கள்; தமது பொருளைப் புதைத்துவைப்பார்கள்.

புருஷரைப் பெண்டுகள் மதியார்கள்; பிள்ளைகள் பெற்றோரை ஆதரிக்கமாட்டார்கள். சீடன் குருவைக் கண்ணியப்படுத்தான். ஒழுக்கத்தில் தாழ்ந்தவர் மேல்ரவர்; உயர்ந்தவர் தாழ்வுறுவார்கள்.

இவ்வாறு நடப்பது கலியுகதருமம் என்பர் அறிவாளர். "இந்தயுக முடிவிற் பிறக்கும் புருடர் பதினாறு வயதையும், ஸ்திரீகள் பனிரண்டு வயதையும் தங்கள் வாழ்நாளுக் கெல்லையாகப் பெறுவதுடன், பெண்கள் ஏழுவயதிலேயே மகப்பேறடைவார்கள்; உருவத்திலும் குறுகுவார்கள்" என்று புராணங்கள் கூறுகின்றன. அல்லாமலும் "சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாஞ் சொல்லிய வண்ணஞ் செயல்" என்கிறபடி வாசாஞானம் பிரபலிக்கும். வாசாகயிங்கரியப்படி செயலிற் காட்டுவது அருமையாகும் என்றும் புராணங்கள் அறுதியிடுகின்றன. அவற்றின்படியே இத்தீக்கருமங்கள் நடைபெற்று நம்பகம், ஒற்றுமை (ஐக்கியபாவனை) முதலிய நற்குணங்கள் சிறப்படையாதிருக்கின்றன. சிலர், போலித்தனமாக ஒற்றுமை முதலியவற்றைக் காட்டுகின்றனர். அவற்றாற் பயனென்னை ? தமிழரசர்காலத்தில், சோழமண்டலத்தில், கண்டியூரில், சீநக்கமுதலியா ரென்பவ ரொருவ ரிருந்தார். அவர் சோழபூபதியிடம் மந்திரித்தொழில் பார்த்துவந்தார்; பொய்யாமொழிப்புலவரோடு மனப்பூர்த்தியான சிநேகம்பூண்டு அப்புலவர்பெருமானை மிக்க அன்புடன் ஆதரித்து வந்தார். முதலியாருக்கும் புலவருக்குமுள்ள ஒற்றுமையை வியந்துகொண்டாடாதவர் அக்காலத் தொருவருமிலர். ஒருசமயம் புலவர் வெளியூர்போக நேர்ந்தபோது முதலியார் அவருக்குக் கட்டமுது கட்டிக் கொடுத்தனுப்பினார். அப்போது புலவர்,

"அளிகொ ளுந்தொடை யாணா சைக்குமன்
ஒளிகொள் சீநக்க னின்றுவந் திட்டசீர்ப்
புளியஞ் சோறுண்ட புந்தியிற் செந்தமிழ்
தெளியும் போதெலாந் தித்தியா நிற்குமே"

என்றொரு பாடல் பாடினார்.

ஒருநாளிரவு முதலியாரும் புலவரும், முதலியார்வீட்டில், அவருடைய மஞ்சத்திலிருந்து வேடிக்கையாக வார்த்தையாடிக்கொண்டிருந்தபோது புலவர் தூங்கிவிட்டார். முதலியார் அவரை அம்மஞ்சத்தின்மீதே யுறங்கவிட்டு, அவசரமானதோர் அரசன்வேலையாய்த் தாம் வெளியே போய்வர நேர்ந்தது. முதலியார் மனைவி வீட்டுப் பணிகளையெல்லாம் விமரிசைப்படுத்திவிட்டு, சயன அறைக்குட் புகுந்து, அங்குத் தமது கணவரே கட்டிலிற்படுத் துறங்குகிறாரென்று நினைத்து, புலவர் பக்கத்திற் படுத்துக்கொண்டனர். முதலியார்

அரசனது காரியத்தை முடித்துக்கொண்டு திரும்பிவந்தார். மஞ்சத்தில் புலவரும் தமது மனைவியும் படுத்திருப்பதைக்கண்டு அதற்காக மனவருத்தம் கொள்ளாமல், புலவரைக் கொஞ்சம் ஒதுங்க இடங் கேட்டு மத்தியிற் படுத்துக்கொண்டார்.

பொழுது புலர்ந்ததும் மூவரும் படுக்கையைவிட்டு ஒருவர்பின் ஒருவராக எழுந்து வந்தனர். இதைக் கண்டவர்களால் இச்செய்தி ஊர்முழுதும் பரவியது. இது அரசன்வரையிலும் எட்டவே அரசன் புலவரை யழைத்து விசாரித்தனன். புலவர் அரசனைநோக்கி,

"தேரையார் செவ்விளநீர் உண்ணப் பழிசுமப்பர்
நாரியார் தாமறிவர் நாமவரை நத்தாமை
கோரைவாய்ப் பொன்சொரியுங் கொல்லிமலை நன்னாடா
ஊரைவாய் மூட வுலைமூடி தானிலையே"

என்றார்.

இதனையறிந்த அரசனும் முதலியாரும் புலவருடன் முன்போலவே ஐக்கியபாவங்கொண்டு சிநேகித்திருந்தனர். பின் சிலநாள் கழித்துப் புலவர் வெளியூருக்குப் போயிருந்தபோது முதலியார் மரணம் அடைந்தார். இச்செய்தியைப் புலவரறிந்து உடனே திரும்பிவந்தார். அப்போது முதலியாரின் பிரேதத்தைச் சுடுகாட்டில் சிதையில் வேகவைத்திருந்தனர். வந்த புலவர் அவ்விடஞ் சென்று, சிதையில் வேகும் முதலியாரது உடம்பை நோக்கி,

"அன்றுநீ செல்லக் கிடவென்றா யாயிழையோ
டின்றுநீ வானுலக மேறினாய்—மன்றல்கமழ்
மானக்கும் வேல்விழியார் மாரனே கண்டியூர்
சீனக்கா செல்லக் கிட"

என்றார். உடனே அச்சிதையிலிருந்த உடம்பு ஒதுங்கியது. புலவர் அதன்பக்கத்தே படுத்துச் சுவர்க்கமடைந்தார்.

ஒற்றுமை அல்லது ஐக்கியபாவம் இப்படியன்றோ இருக்க வேண்டும். வாசாகயிங்கரியமான ஒற்றுமை வாய்க்குக் கெடுதியேயன்றிப் பயன்றருவதாகாது. ஆதலின், ஒவ்வொருவரும் மேற்கூறிய தீக்குணங்களை அகற்றி உலகிற் கவசியமானவற்றைச் சொல்லளவில்மட்டும் நிறுத்தாமல் செயலிலுங்காட்டி நமது நாட்டை முன்னுக்குக் கொண்டுவர முயலவேண்டும். இறைவன் அருள் புரிவானாக.

ஓம் தத் ஸத்.

செல்வமும்—வறுமையும்

தடங்கருணைப் பெருங்கடலும், தனிப்பெருஞ்சோதியும், தலைவர் தலைவனுமாய இறைவன், உயிர்களிடத்துள்ள பேரன்பினால், மக்களை, அவரவர் வினைகளுக்குத் தக்கவாறு, இன்பதுன்பங்களை நுகர்வித்து, கருமபாசங்களைக் கழல்வித்து, இறுதியாக, என்றேனும் ஒருநாள் தன்னடிக்கீழ் கூட்டுவித்தருளுவன் என்பது பெரியோர் துணிபு "உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும்; நிலைபெறுத்தலும்; நீக்கலும்; நீங்கலா—அலகிலா விளையாட்டுடையார்" ஆய தலைவர் ஆட்டிவைத் தருளுவதற்கேற்ப இவ்வுலகம் இயங்குகின்றது. இத்தகைய இப்புவியில் தன்னையும், தன்னைச் சார்ந்தாரையும் காப்பாற்றிக்கொள்ளவும், ஒல்லும்வகை பிறர்க்கு உதவவும் வேண்டி, அறநெறி நின்று பொருள் ஈட்டுதல் வேண்டும். அதைவிட்டு, "உண்ணான்; ஒளிநிறான்; ஓங்குபுகழ்செய்யான்—; துன்னருங் கேளிர் துயர்களையான்;—கொன்னே-வழங்கான்"—எனத் தூற்றநின்று "நடுவூருள் நச்சுமரம் பழுத்தற்று"—என்பதுபோல, வாழ்ந்து; தானும் அனுபவியாது, பிறரையும் அனுபவிக்கவொட்டாது, ஊணும், உறக்கமும் ஒழித்து, வீணிற் பொருள் காத்து நிற்போர், 'செல்வர்' என அழைக்கப்பெறுதற்கு அருகரல்லர். "கொடுப்பதூஉம்; துய்ப்பதூஉம் இல்லார்க்கு—அடுக்கிய—கோடி உண்டாயினும் இல்"—எனும் பொய்யாமொழிக் கிணங்க, அத்தகையோர் நித்திய தரித்திரரே ஆவர். பொன்னும், பொருளும் தம்மளவில் உயர்வுடையனவல்ல என்பதும், தாம் அளிக்கும் பயனை நோக்குமிடத்தே உயர்வுடையன என்பதும் உய்த்துணரற்பாலன. ஆதலால், ஆண்டவனது அருளால் அளிக்கப்பெற்ற செல்வத்தைக்கொண்டு, தானும் அனுபவித்து, தம்மைச்சார்ந்தாருக்கும் ஆதரவளித்து, ஒல்லும்வகை, இல்லார்பிறர்க்கும் ஈந்து வாழ்தலே செல்வத்தாற் பெறற்பாலதாய சீரியபேறு; அஃதே அறநெறி; அதுவே, உண்மை இன்பமுமாம். இதனாலன்றோ, "ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்! தாமுடைமை—வைத்திழக்கும் வன்கணவர்"—என வள்ளுவரும் திருவாய்மலர்ந்தருளினர். மற்றும், பிறர்க்கு உதவப்பெறாது, பாம்புகாக்கும் மாணிக்கமேபோல, பெருங்கவலையோடு பேணிச் சேமித்து வைக்கப்பெறும் செல்வம், தன்னைக் காப்பாற்றிவந்தவன் காலத்திற்குப் பின்னர், பிறபல வேற்றார்களாலும், பலவழிகளிலும் சிதைத்துச் செலவழிக்கப்பெறுதல் கண்கூடே. இதுகண்டன்றோ, "ஈயார் தேட்டைத் தீயார் கொள்வார்"—என ஔவைமூதாட்டியும் அருளிச்சென்றனள். நிற்க,

'செல்வம்' எனப்படுவது, 'பணம் பத்துவகைசெய்யும்' எனும் பழமொழிக்கேற்ப, இவ்வுலகிலுள்ளவரையில் நமக்குப் பலநலங்களையும் கூட்டுவிப்பதாயினும், மறுமையில் நம்மைத் தொடர்ந்துவர வல்லதன்று; அறமொன்றே மறுமையிற் பயனளிக்க வல்லது. ஆதலின், இருமையிலும், பெருமை விளக்கும் அறமொன்றே, செல்வத்தாற் பெறத்தக்க சீரியபேறு.

இப்பெரும்பேற்றினை, இழந்து வாழ்வோர்நிலை, பெரிதும் இரங்கற்பாலதேயாம். "ஒட்டோடு பற்றின்றி உலகைத் துறந்த செல்வ—பட்டினத்தா"ரும்,

"பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை இடைநடுவில்
குறிக்கும்இச் செல்வம் சிவன்தந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லு கேன்கச்சி ஏகம்பனே"

என்று இக்கருமிகள்பால், கருணைமிகையால் இரங்குதல் காண்க. மற்றும், இச்செல்லம் என்றும் நிலைத்துநிற்கும் தன்மைத்தன்று; வறுமையும் அத்தகைத்தே. வண்டிச் சக்கரக்காலொப்ப, மாறிமாறிவரும் தகையது செல்வம். நற்காலம் வந்தவிடத்தே நணுகுதலும், அல்லாவிடத்தே அகலுதலும் அதன் இயல்பு. இஃது "கூத்தாட்டவைக் குழாத்தற்றே; பெருஞ்செல்வம்—போக்கும் அது விளிந்தற்று" எனும் குறட்பாவானும்; "மருவினிய சுற்றமும்; வான்பொருளும்; நல்ல உருவும்; உயர்குலமும்; எல்லாம் திருமடந்தை ஆம்போதவளோடும் ஆகும்; அவள் பிரிந்து போம்போ தவளோடும் போம்" என்பதாலும், "குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர்—நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர், குன்றத்தனை இருநிதியைப் படைத்தோர்—அன்றைப்பகலே அழியினு மழிவர்; அறத்தொடு பிச்சைகூவி இரப்போர்—அரசரோடிருந் தரசாளினுமாள்வர்" எனவரூஉம் பெரியோர் மொழியாலும் இனிது பெறப்படும். ஆதலின், "நில்லாதவற்றை நிலையென்றுணரும் — புல்லறிவாண்மை"யைப் போக்குதல் வேண்டும். உயர்தரவாழ்க்கை நடாத்தும் செல்வர்களைநோக்கி, உலகமெங்கணும்சென்று பெரும்புகழ் நிறுவிய பெரியாராம் விவேகானந்தசுவாமிகள், "இந்த உலகம் மாயை என்று சிலர் கூறுகின்றனர்; உண்மையில், நீங்கள்தான் மாயைகள். கல்வியும், நாகரிகமும் விருத்தியாகிக்கொண்டுவரும் இந்நாளில்—இன்னும், இந்தப் பணத்தை வைத்துக்கொண்டிருக்கின்றீர்களா! உங்கள், சந்ததியாருக்கு, அவற்றை அளித்துவிடுங்கள். உங்களுடைய இடத்தில், புதிய இந்தியா தோன்றட்டும்; கலப்பையைப் பிடித்துக்கொண்டிருக்கும் குடியானவனிட மிருந்து, செம்படவனிடமிருந்து, சக்கிலியனிட மிருந்து; புதிய இந்தியா உதயமாகட்டும்; சோலைகளிலிருந்து, வனங்களிலிருந்து, மலைகளிலிருந்து புதிய இந்தியா கிளம்பட்டும்" என்றார். (இவை சுவாமிகள் தமது சீடரில் ஒருவருக்கு எழுதிய கடிதத்தினின்றும் எடுக்கப்பெற்றன) மற்றும்,

பொருட்செல்வம் ஒன்றே, போதியதுணையாகாது; அருட்செல்வத்தையும் கொண்டிருப்போரே, நிரம்பிய 'செல்வர்' எனப்பெறுவர். இருமையிலும், பெருமையடைவதற்கு இன்றியமையாது வேண்டற்பாலது அருள். அருள் உருவாய ஆண்டவனது மக்களாய நாம், நமது ஏழைச் சகோதரர்களிடத்தும் அருளுடைமைபூண்டு ஒழுகினாற்றான், அனைவர்க்கும் அத்தனாம் ஆண்டவனது அறக்கருணைக்கு இலக்காகப்பெறுவோம். அத்தகைய

அருள் நெஞ்சினார்க்கு, யாதொரு தீங்கும் விளைவதில்லை. இக்கூற்றை வலியுறுத்த "அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை; இருள் சேர்ந்த—இன்னா உலகம் புகல்" எனவும்; "மன்னுயிரோம்பி அருளாள்வாற் கில்லென்ப, தன்னுயிர் அஞ்சும் வினை" எனவும், வளுடம் பொய்யில் புலவரது பொன்மொழிகளே போதிய சான்றுகளாம். அருளோடுகூடி, இரவலர்க்கு அளிக்கும் அறவினையாளர்கள், தமது செல்வங்குன்றப் பெறுகின்றார்களில்லை; அன்னார்தம் வருவாய், ஏழைகளது வாழ்த்துக்களினால், மேன்மேலும் பெருகி வளர்வதோடு, புகழும் செழித்து வளரும். அவ்வருளாளருள், உயர்ந்தோர், தாம் வறுமையுற்றகாலத்தும், 'நீரின்றி வறண்டு கிடக்கும் ஆற்றுமணலை, சிறிது தோண்டிற் சுரந்து பெருகும் ஊற்றுநீர்' போல, தம்பால் வந்தோர் குறைகளைப்போக்கியே அனுப்புவர். உதாரணமாக, குமண சக்கரவர்த்தி, புலவருக்குத் தலையளிக்க ஒருப்பட்ட கதையினை நோக்குக. இதுகாறும், கூறிவந்த யாவும், உயர்தரவாழ்க்கை நடாத்தும் செல்வர்கட்கே சாலப்பொருத்தமுடையனவாம். இனி, இடைத்தரச் செல்வர்கட்கு,(அதாவது, முன்னோரால் சேமித்துவைக்கப்பெற்ற பொருள்பெரிதுமின்றி, தம் முயற்சிகொண்டு சேகரிக்கப்பட்டதும்; தமக்கும், தம்மைச் சார்ந்தார்க்கும் டாம்பிகமற்ற சுகவாழ்க்கைக்குப் போதியவளவுகண்டு, சிறிது எஞ்சுவதுமாகிய செல்வப்பொருளை உடையார்க்கு)ச் சில கூறுவோமாக.

இடைத்தர செல்வர்களே! உங்கள் வாழ்வே சுகவாழ்வு; அமைதி நிலவும் வாழ்வு; அவாவெனும் பேயை அகற்றும் வாழ்வு. அளவுக்கு மிஞ்சிய பெரும்பொருள், சில சமயங்களில், ஆடம்பரச்செலவுகட்குக் காரணமாய் நின்று, வீண்விரயத்திற் குட்படுதலால், எத்தகைய நற்பயனும் விளைவியாததோடு, சிறுகச் சிறுகச் செலவுக்குள்ளாகித் தேய்ந்தழியும்; சிக்கனமாக வாழ, பின்பழக முயலினும், அப்பெருஞ்செல்வர்களை, அடக்கிவிடவல்லது. ஆனால், செலவின் அளவினும் சிறிது பெருகிய வருவாயை உடைய பொருள், அமைதிக்கும்; அருளுடைமைக்கும் அன்புக்கும் நிலைக்களனாக நிலவற்பாலது. உயர்தர (டாம்பிக) வாழ்க்கை நடாத்துவோரைக்கண்டு நீங்களும் அவ்வாறு ஆடம்பரவாழ்வு வாழவேண்டும் என்று ஆசைப்பட்டு வருந்துதல் கூடாது. அவர்கள் வாழ்க்கை, வெளிக்கு ஆனந்தமாகத்தோற்றினும், உண்மையில் அமைதியற்றது. எளியவாழ்வே இன்பம் பயப்பது. இதுகண்டே, மேனாட்டில் தலைசிறந்த ஞானிகளான, டால்ஸ்டாய், ரோமென்ரோலண்டு முதலிய அறிஞரும், இந்நாட்டில் காந்தியடிகள் உள்ளிட்ட ஆன்மஞானிகள் பலரும் எளிய வாழ்வையே போற்றுவாராயினர். அவா எனப்படுவது எத்தகையினரையும் அல்லற்படுத்துவது. "ஆசை வரவர ஆய்வரும் துன்பங்கள்—ஆசை விடவிட ஆனந்தமாமே" என்பது திருமூலர் பெருமொழி. "உள்ளதேபோதும்; நானென்றெனக் குளறியே ஒன்றைவிட் டொன்றுபற்றி—பாசக்கடற்குளே வீழாமல் மனதற்ற பரிசுத்த நிலையை அருள்வாய்!" என்று ஈசனை வேண்டினார் தாயுமானார்.

'போதுமென்ற மனமே பொன்செய்யு மருந்து" என்பது மூதுரை. ஆதலின், உள்ளநிலைமையில் திருப்தி அடைந்து, ஆடம்பரமற்ற சுகவாழ்க்கையை மேற்கொண்டு, நமக்கும், நம்மைச்சார்ந்தோருக்கும் கண்டு மிகுந்த பொருளை "ஐயமிட்டுண்" எனும் ஔவை மொழிப்படி, அருள் நிறைந்த நெஞ்சினராய், பிச்சை இடத்தக்க இரவலர்க்குப் பகிர்ந்து வழங்கியின்புறுங்கள்.

(தொடரும்) ஆ. வ. பதுமநாப பிள்ளை,
"திருமகள் நிலயம்" ஆரியூர், (விழுப்புரம் தாலுகா)

நாலடியார் வசனம்.

(325-ம் பக்கத் தொடர்ச்சி.)

33-ம் அதிகாரம்—புல்லறிவாண்மை.

(அற்ப அறிவை உடைத்தன்மை.)

அறிவுடைப் பெரியோர், கிருபையால் தருமமார்க்கத்தைச் சொல்லும் அன்புடையவர்களின் வாய்ச்சொற்களைப் பயன்தரும் சொற்களாகக் கொள்ளுவார்கள். பாற்சோற்றின் ருசியை அகப்பை அறியாததுபோல, பொருளாகாத சிற்றறிவுடையவன் அச்சொற்களை இகழ்ந்து சொல்லுவான். (1)

தோலைக் கடித்துத் தின்னும் புலையர்களுடைய நாயானது பால் சோற்றின் சுவையைக் கொள்ளுதலை அறியாததுபோல, பொறுமைக் குணமில்லாத பெரியோர் தருமமார்க்கத்தைச் சொல்லும்போது நல்லறிவில்லாதவர்கள் காதுகொடுத்துங் கேட்கமாட்டார்கள். (2)

தமது இனிய வுயிரானது கண்மூடித் திறக்குங்காலத்தில் (உடலைவிட்டுப் பிரிந்து) போகும் வழியை, எல்லாவகைகளாலும் தாம் அறிந்திருந்தும், இளையவளவாயினும் நற்காரியத்தைச் செய்யாத வெட்கமற்ற சிற்றறிவுடைய மனிதர்கள் செத்தாலென்ன வாழ்ந்தாலென்ன? (3)

(ஒருவன்) தனது வாழ்நாள் சிலவாயிருத்தலாலும், (தனது) உயிர்க்கு (அது உடம்பைவிட்டுப் போகாதபடி செய்யக்கூடிய) காவல் இல்லாமையாலும், (பார்ப்போர்) பலரும் தூற்றத்தக்க பழியாகுமாதலாலும் (உலகிலுள்ள) பலபேர்களுள்ளும் கண்டவர்க ளெல்லோருடனும் (இனிமையாகக்கூடி) மகிழாமல், விலகித் தனியாக இருந்து விரோதம் பாராட்டுதல் என்னகாரணமோ! (4)

ஒருவன் பலர் கூடியிருக்கும் சபையின்முன்பு போய், மற்றொருவனை இழிவாகப்பேசி வைதான். (அவ்வாறு அவன்) வைய, வையப்பட்டவன் யாதொன்றும் பதில் பேசாமல் சும்மா இருப்பானானால், வைதவன் வாழான்; அங்ஙனம் வாழ்வானானால் (அவன்) அதிசயப்படத்தக்கவனேயாவான். (5)

விருத்தாப்பியமானது மிகுதியாக வராமலிருப்பதற்கு முன்பே தரும காரியங்களைச் செய்யத்தொடங்கி இளமையில் அவ்விஷயத்தில் முயற்சியில்லாதவன், (பின்பு) வேலைக்காரியாலும் தள்ளப்பட்டு 'வெளியிலிருபோ' என்னுங் கடுஞ்சொற்கள் சொல்லப்படுவான். (மிக்க எளியவனாகி வேலைக்காரிகளாலும் இழிவாகப் பேசப்படுவான்.) (6)

அற்பவறிவுடையோர், (தாம் பெற்ற செல்வத்தைக்கொண்டு) தாங்களும் இன்ப மனுபவிக்கமாட்டார்கள்; பெரியோர்களுக்குத் தானம் செய்யவுமாட்டார்கள்; (தமது) உயிர்க்குப் பாதுகாப்பாகவுள்ள நல்ல தரும மார்க்கத்தையுஞ் சேரமாட்டார்கள்; தாங்கள் அறிவுகெட்டுச் செல்வத்திலேயே ஒன்றுந் தோன்றாமலிருந்து தங்கள் வாணாளை வீணாகவே ஒழித்துவிடுவார்கள். (7)

இளம்பிராயத்திலேயே (தாம் இறந்தபின்பு) போகும்படியான மறுவுலகத்திற்குத் தமக்கு வேண்டிய (தருமமாகிய) கட்டுச்சோற்றை மிகவும் அழுத்தமாகத் தோளிற்கட்டிய மூட்டையாகக் கொள்ளாதவர்களாய், பொருளைக் கெட்டியாகப் பிடித்துத் தருமத்தைப் பிறகு செய்வோமென்றெண்ணியிருக்கும் அறிவற்ற லோபிகள், (தங்கள் மரணகாலத்தில்) கையாற்காட்டும் பொன் குவியலும் புளித்த விளாங்காயாகும். (மரணகாலத்தில் தருமஞ்செய்யவெண்ணித் தம் மனைவி மக்களைப் பார்த்துத் தம்மிடமுள்ள பொன்னைக் கொண்டுவரும்படி கையைக்குவித்துச் சைகைகாட்ட அக்கருத்தை யறியாமல் அவர்கள் விளங்காயைக் கொணர்ந்து கொடுப்பார்கள் என்பது கருத்து.) (8)

அற்பபுத்தி புடையவர்கள், செல்வமில்லாத தரித்திரகாலத்திலும் வியாதிகள் வந்தகாலத்திலும் மறுமைக் குபயோகமாகும்படியான தருமத்தைச் செய்யவேண்டுமென்னும் மனமுள்ளவர்களாயிருந்து, (தரித்திரமும் வியாதியும் இல்லாமல் தருமம்) செய்யக்கூடியகாலத்தில் (சிறிய) கடுகளவாவது மறுமைக்குரிய தானதருமத்தைப்பற்றி நினைக்கவும் மாட்டார்கள். (9)

ஐயோ! அளவுகடந்த ஆசையையுடைய தமது அருமையான உயிருக்கொப்பான உறவினரை எடுத்துக்கொண்டு போவதற்குவேண்டிய முயற்சியைச் செய்கிற எமனைப் பார்த்திருந்தும் (பெறுதற்கருமையான) உடலைப் பெற்றிருந்தும் (சிறிதும்) தருமத்தைக்குறித்து நினையாதவர்களாய் அறிவில்லாதவர்கள் வீணாகத் தமது வாழ்நாளைப் போக்குவார்கள். இது என்ன அதிசயம்! (10)

34-ம் அதிகாரம்—பேதைமை.

(யாதொன்றையும் அறியாமை.)

கொலை செய்யும்படியான வலிய பெரிய எமன் (உயிரைக்) கொண்டுபோகுஞ்சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்க, (அதைக்குறித்துச் சிறிதும் சிந்தியாமல்) இவ்வுலக வாழ்க்கையாகிய வலையில் மிகவும் களித்திருப்பவர்களுடைய தன்மையானது, ஆமையைக் கொலைசெய்பவர்கள், (அதை) உலையில் போட்டு நெருப்பைமூட்டி யெரிக்கையில், (அந்த ஆமையானது) தனது (அபாய) நிலைமையை யறியாமல் அந்த உலைநீரில் முழுகி விளையாடினாற் போலும். (1)

'குடும்பத்தின்பொருட்டுச் செய்யவேண்டிய காரியங்களையெல்லாம் குறைவற (ச்செய்து) முடித்துவிட்டு அதன்பின்பு தருமகாரியங்களைச் செய்வோம்' என்றிருப்பவர்களுடைய தன்மையானது, பெரிய கடலில் நீராடுதற்குச் சென்றவர்கள், (கடலின்) ஓசைமுழுதும் அடங்கினபின்பு நீராடுவோம் என்று காத்திருந்தாற்போலும். (2)

நல்லகுலமும் தவமும் கல்வியும் நற்குடிப்பிறப்பும் முதுமையும் ஆகிய இந்த ஐந்தும் தவறாமல் ஒருவனடைந்திருந்தாலும், பெருமை மிகுந்த குற்றமற்ற பழமையான சிறப்பினையுடைய சுவர்க்கம் முதலிய உலகங்களின் தன்மையை யறியாமலிருத்தல் நெய்யில்லாத வெண்சோற்றுக்குச் சமமாகும். ('நெய்யில்லா வுண்டிபாழ்' என்பதனாலும் நெய்யில்லாச் சோற்றின் தன்மையையறிக.) (3)

கற்களானவை (பிறர்சொல்லும்) சொற்களை மிகவும் அறியமாட்டாவாயினும், அந்தந்தக்காலத்திலே தம்மையடைந்தவர்க்கு நிற்றல் இருத்தல் கிடத்தல் நடத்தல் என்னுங் காரியங்களுக்கு உதவியாயிருத்தலால் (ஒன்றுக்குமுதவாத) கடைப்பட்ட மனிதர்களைவிட அந்தக் கற்களே மிகவும் நல்லவைகளாம். (4)

தாம் அடையும் பயன் ஒன்றுமில்லாவிட்டாலும் (ஏதோ ஒரு பயனை) அடைந்தவன்போலக் கோபங்கொண்டு, தான் கோபிக்கத்தகாதவர்களாகிய மேன்மக்கள் முதலானவர்களிடத்திலும் கோபங்கொண்டு அக்கோபத்தால் கொடுஞ்சொற்களைத் தொடர்ச்சியாகச் சேர்த்துச்சொல்லி, அக்கொடுஞ் சொற்களின் பொருளை யுரைத்து விளக்காவிட்டால் அறிவில்லாதவனுக்கு நல்ல தினவானது நாக்கை வருத்தும் போலும்! (5)

நல்ல தளிருள்ள புன்னைமரங்கள் மலர்ந்திருக்கும் கடற்கரை பொருந்திய பாண்டிய நாடனே! தம்மிடத்து (அடக்கம் முதலான) நல்லொழுக்கம் இல்லாதவர்களின் பின்னால் போய், அவர்களைத் தம்மிடத்தில் வணங்கியிருக்கும்படி செய்வோம் என்பவர்களுடைய இழிவான சிநேகமானது கல்லைக் கிள்ளிக் கையை யிழந்தாற்போலும். (6)

ஒரு பாத்திரத்திற்குள் நெய்யிருந்தால், (அந்த நெய் தமக்கு உண்ணக் கிடைப்பது) இல்லையானாலும், எறும்புகள் அப்பாத்திரத்தை விட்டுப் போகாமல் அதன் வெளிப்பக்கத்தில் சுற்றிக்கொண்டே யிருக்கும். (அதுபோல) யாதொன்றும் கொடாதவர்களானாலும் செல்வமுடையவர்களை (உலகத்தார்) விடாமல் சுற்றிக்கொண்டே யிருப்பார்கள். (7)

(இவ்வுலகத்திற் பலர்) தினந்தோறும் நற்குண நற்செய்கைகளை யடையமாட்டார்கள்; தருமம் செய்யமாட்டார்கள்; வறியோர்களுக்கு

யாதொரு பொருளும் கொடுக்கமாட்டார்கள்; நுணங் செயல்களிலெல்லாம் இனியவரான தம் மனைவியர்களுடைய தோள்களைச் சேரமாட்டார்கள்; புகழுண்டாக வாழமாட்டார்கள் (இப்படிப்பட்ட அறிவில்லாதவர்கள்) தாங்கள் உயிர்வாழ்ந்திருக்கும் நாள்களை வெறுக்கமாட்டார்களோ! (அவர்களின் வாழ்நாட்கள் வெறுக்கத்தக்கவையாமென்பது கருத்து.) (8)

ஒருவரை மற்றொருவர் விரும்பிக்கொண்டாட, (அப்புகழ்ச்சியை நாங்கள்) விரும்பமாட்டோம் என்று நினைத்திருக்கும் ஆராய்ந்தறியும் நல்லறிவில்லாத மூடர்களிடம்கொண்ட சிநேகமானது, முழங்குகின்ற ஓசையுடையதும் பாயும்படியான அலைகளையுடையதுமாகிய கடல்சூழ்ந்த உலகம் முழுவதும் தருவதாயிருந்தாலும் இனிமை தராததேயாம். (9)

(ஒருவன் தான்) கற்ற கல்வியையும் மிகுந்த மேன்மைக்குணத்தையும் உயர்குடிப் பிறப்பையும் அன்னியர் புகழ்ந்து கொண்டாடினால் பெருமையடைவான். (அப்படிக்கின்றி) தானே புகழ்ந்து பேசுவானானால் (பரிகாசஞ்செய்து நகைக்கும்) மைத்துனர் அதிகரித்து, எவ்வித மருந்தாலும் தீராத வெறிகொண்டவனென்று (எல்லோராலும்) இகழப்படுவான். (10)

(தொடரும்.) பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.

ஆரிய சித்தாந்தம்.

(309-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆரியாசாரம்—பிதிருயக்ஞம்.

முன்பு நித்தியவிதி கூறிய சந்தர்ப்பத்தில் இதைப்பற்றிச் சிறிது கூறப்பட்டது; விரித்து எழுத அவகாசம் நேராமையால் சுருக்கிக் கூறப்பட்டது. ஈண்டு அதனைச் சிறிது விரிவாக எழுதுவாம்:

இந்தப் பிதிர்யாகத்திற்கு மேற்பட்ட கருமம் யாதொன்றும் காணப்படவில்லை. யாகாதிகருமங்களும் இதற்குமேலாகா. யாகாதிகளையும் மற்றுமுள்ள தேவகாரியங்களையும் ஒருவன் செய்யாமல் விட்டுவிடலாம். இந்தக்கர்மத்தை ஒருபோதும் விடக்கூடாது. பிரமசாரி, கிருகஸ்தன், வானப்பிரஸ்தன் இந்த மூன்று வருணத்தாரும் தத்தம் ஆச்ரமமுறைப்படி செய்தே தீரவேண்டும். இதைவிட்டவனுக்கு எந்தக் கர்மமும் பயன்படாது. அவனைத் தேவ பிதிர் ரிஷிகளாகிய மூவினத்தாரும் வெறுப்பார்கள். இது தன் பிதா மாதா, பிதாமகன் பிதாமகி, பிரபிதாமகன் பிரபிதாமகி இவர்களுடைய திருப்தியைக்குறித்துப் பிதிர்த்தேவர்களை ஆராதிப்பதாம். இதற்குக் கிருதக்ஞை என்று பேர் கூறப்படும். அதென்னவென்றால் "நன்றியறிவு" என்பதாம்.

கேவலாவஸ்தையில் யாதொன்றையும் அறியாமல் மயங்கிக்கிடந்த ஜீவான்மாவைப் புருஷன் இரண்டுமாதம் கருவிருந்து பரிபாகப்படுத்தி ஸ்திரீயின் கர்ப்பாசயத்திலிட்டுக் கருவிகாரணாதிகளை நல்கிச் சகலாவஸ்தையிற் கூட்டி, நன்மைதீமைகளைப் பகுத்தறியும் மெய்யறிவைப் பிரகாசிப்பித்து

அதனால் தேவாராதனை முதலிய சற்கருமங்களை உணர்த்தி, அதுமூலமாகச் சொர்க்காதிபுவனங்களையும், ஜன்மாந்தரத்தில் மீளாக்கதியாகிய மோட்ச கதியையும் அடையும்படி மாதாபிதாக்கள் உபகரித்தார்கள். இதற்கு மேற்பட்ட ஒன்றுமேயில்லையல்லவா? இந்த உபகாரத்தை மறவாமல் அவர்களுக்குப் பிரதி உபகாரம் செய்வதே இதுவாதலால் மிகச் சிறந்தது. இதைச் செய்யாதவனுக்குத் தேவாராதனை தானாதிதர்மங்கள் யாவும் ஒருபயனுங் கொடா. ஆதலால் எப்பாடுபட்டாவது. பிச்சையெடுத்தாவது இதனைச் செய்தே தீரவேண்டும். இதைச் செய்வதனால் நன்றியறிதலாகிய பயன் எப்படிவரும்? பிதிர்களுக்கு யாதுபயன்? என்னின், இதுபயனாம்.

அதாவது, பிதிர்த்தேவதைகள் சிராத்தபலனைப் பிதிர்க்களிடம் சேர்ப்பித்துவிடுவார்கள். பிதிர்க்கள் அதனால் தாங்களிருக்கும் நரகாதி துன்ப உலகங்களைவிட்டு வேறிடம்சென்று வேறு ஜன்மத்தை அடைவார்கள். நரக துன்பத்தினின்றும் பிதிர்க்களை விடுவிப்பதே பிதிர்யாகத்தின் பயனும். அப்படி விடுபட்டவர்கள் தம் சந்ததியாரை மனமொத்த அன்புடன் ஆசீர்வதித்து வாழ்த்துவார்கள். அதனால் கர்த்தாவின் சந்ததிகெடாமல் விருத்தியாகும். இது மிகுந்த சிரத்தையுடன் செய்யப்படுவதாதலால் அதற்குச் சிரார்த்தமென்று நூல்கள் பெயரிட்டு வழங்கும்.

அத்திரி புத்திரர், தத்தாத்திரேயர்; அவர் புத்திரர் நிமியென்பவர். நிமிக்கு ஸ்ரீமான் பிறந்தான். ஆயிரவருஷகாலஞ் சென்றபின் காலகதியை அடைந்தான். அதனால் நிமிக்குத் தாங்கமுடியாத துக்கம் உண்டாயிற்று. துக்கம் மிகுந்த நிமி தன்புத்திரனுக்கு நன்மைசெய்வதைக்குறித்து வெகுநாள் ஆராய்ந்தார். பிறகு கிருஷ்ணபட்ச சதுர்த்தசியின் இரவில் தூங்காமல் யோசித்துச் சிரார்த்தம் செய்யுமுறையைத் தீர்மானித்துக்கொண்டார். மறுநாள் அமாவாசை தினத்தில் தம் புத்திரனுக்குப் பிரியமான காய் கனி கிழங்குகளைச் சேகரித்துக்கொண்டு சிறந்த பிராமணர்களை வருவித்துத் தெற்குமுக நுனியாக இலைகளைப்போட்டு, எழுபிராமணர்களையும் உட்காரவைத்துப் போஜனமிட்டார். அப்போது உப்பில்லாச் சாமை அரிசிச் சாதமே போடப்பட்டது. அவர்கள் புசித்தபின் தெற்குநுனியாகப் போடப்பட்ட தர்ப்பையில் தன்புத்திரனுக்குப் பிண்டப்பிரதானம் செய்தார். அவருக்கு மகிழ்ச்சி யுண்டாயிற்று.

பிறகு தாம்செய்த காரியத்தைப்பற்றி வருந்தி இது தர்மமோ அதர்மமோவென்று கவலைப்பட்டார். இதற்குமுன் ரிஷிகளால் செய்யப்படாத இந்தக்காரியத்தை நான் என்செய்தேன்! ரிஷிகள் சாபமிட்டு என்னைவிட்டு நீங்கிவிட்டால் என்னசெய்கிறது? என்று சிந்தித்துத் தமது குலோத்தமராகிய அத்திரிமுனிவரைச் சிந்தித்தார். உடனே அத்திரிமுனிவர் வந்து நிமிக்கு ஆறுதல்சொல்லி நீ செய்தகாரியம் எனக்குச் சம்மதம். ஏனென்றால் ஆதிகாலத்தில் பிரமதேவர் இந்தத் தர்மத்தை நியமித்திருக்கிறார். பிரமாவைத்தவிர வேறு யாவர் சிரார்த்தவிதியை ஏற்படுத்தும் சக்தியுள்ளவர்?

பிரமாவினால் நியமிக்கப்பட்ட தர்மவிதியையே நீ அனுசரித்தாய். துக்கப்படவேண்டாம். பிரமாவினால் ஏற்படுத்தப்பட்ட சிரார்த்தவிதியை உனக்குச் சொல்வேன். நீ அதைத் தெரிந்துகொண்டு செய் என்று சொல்கிறார்.

''ஆதிகாலத்தில் பிரமதேவர் மந்திரத்தோடு ஓரிடத்தை உண்டாக்கினார். அவ்விடத்தில் அக்கினியுடன் கூடியிருக்கும் ஸோமன், பிதிர்க்கள் இவர்களுக்கு ஹவிர்ப்பாகங்களை ஏற்படுத்தினார். சிரார்த்தத்தில் பூமிதேவியையும் வருணனையும் துதிக்கவேண்டும். பிறகு அக்கினியையும் ஸோமனையும் ஆராதிக்கவேண்டும். பிரமதேவரால் படைக்கப்பட்டவர்களும் சூரியகிரணங்களையே புசிப்பவர்களுமான பிதிர்த்தேவதைகளையும் ஆராதிக்கவேண்டும். காலகதியை நடத்துகிறவர்களும், எந்நாளுமுள்ளவர்களும், மஹாத்மாக்களுமான விசுவ தேவர்களே பிரதானமானவர்கள். இவர்கள் ஸஹன் என்பவர்முதல் ஈசுவரன் என்பவர் ஈறாக அறுபத்துநாலு பேர்கள் என்று நூல்கள் கூறுகின்றன.

சிரார்த்தத்தில் கேழ்வரகு முதலிய இழிந்த தானியங்களை உபயோகிக்கப்படாது. பெருங்காயம், உள்ளி, வெண்காயம், முருங்கைக்காய், கத்தரிக்காய், பூசணிக்காய், சுரைக்காய் முதலிய காய்களு மாகா. துப்புதல், இருமுதலும் ஆகா. காஷாயம் உடுத்தினவன், சண்டாளன், சக்கிலியன் முதலியவர்களையும் சேர்க்கலாகாது. என்றால் அவர்கள் சம்பந்தம் எவ்வகையிலும் ஆகாது என்பது. பாபிகளையும் பாபிகளோடு சேர்ந்தவர்களையும் ஒதுக்கவேண்டும். குஷ்டரோகியை விலக்கவேண்டும். அமாவாசையில் சிரார்த்தம் செய்யவேண்டும்'' என்று கூறி அத்திரிமுனிவர் பிரமலோகம் போய்விட்டார். இப்படித்தான் சிரார்த்தகிரியை தொடங்கப்பட்டது.

அதன்பிறகு எல்லா ரிஷிகளும் விதிப்படி சிரார்த்தம் செய்யத் தொடங்கினார்கள். சிரார்த்தம் செய்தபின் தர்ப்பணமும் செய்தார்கள். நாலுவருணத்தாரும் செய்தார்கள். இப்படிச் செய்யப்பட்ட சிரார்த்தத்தில் புஜித்த தேவர்களும் பிதிர்க்களும் புஜித்த உணவை ஜீரணிப்பித்துக்கொள்ளச் சக்தியற்றுப் போயினர். சந்திரனிடம்போய் ''ஸோமனே! நாங்கள் சிரார்த்த போஜனத்தினால் வருந்துகிறோம். எங்களுக்கு நன்மையைச் சொல்'' என்றார்கள். ஸோமன் ''நீங்கள் பிரமாவினிடம் போய்க் கேளுங்கள். பரிகாரம் அவர் கூறுவார்'' என்றான். அப்படியே தேவர்களும் பிதிர்க்களும் மேருமலைச்சிகரத்தில் வீற்றிருக்கும் பிரமதேவரைக்கண்டு தம் குறைகளை கூறினார்கள். அதுகேட்ட பிரமா ''என்பக்கத்தி லிருக்கும் அக்கினி உங்களுக்குப் பரிகாரம் செய்வான்'' என்றார். அக்கினிதேவனும் அவர்களை நோக்கிச் ''சிரார்த்தகாலத்தில் நாம் சேர்ந்தே புஜிப்போம்; என்னுடன் கூடியிருப்பதினால் உங்களுக்கு அஜீர்ணம் உண்டாகாது''என்றான். பிரமதேவர், புலஸ்தியர், வசிஷ்டர், புலகர், அங்கிரஸ், கிரது, காசியபர் என்னப்பட்ட மஹாயோகேசுவரர்களாகிய இவ்வேழுபேருமே பிதிர்த்தேவதைகள் என்னப்படுவோர்கள். சிரார்த்தம்செய்து ஸபிண்டீகரணம் செய்வதனால் இறந்த

வர்கள் பிரேதத்தன்மையினின்றும் விடுபடுகிறார்கள். முதலில் பிதாவுக்கும், இரண்டாவது பிதாமகருக்கும், மூன்றாவது பிரபிதாமகருக்கும் பிண்டப்பிரதானம் செய்யவேண்டும். ''ஸோமாய பிதிருமதே'' என்று கூறிப் பிதிர்க்களுக்கு அதிகாரியான ஸோமனுக்கு என்றும் கூறவேண்டும். தன்னினத்தாருக்கும், தன் வம்சப்பிதிருக்கும் தர்ப்பணம் செய்யவேண்டும். கிருஷ்ணபட்ச முடிவாகிய அமாவாசையிலேயே சிரார்த்தம் செய்யவேண்டும்.

எல்லா ரிஷிகளும் அமாவாசையில் சிரார்த்தம்செய்து வந்தமையால் நிமிந்திரணம் புசிக்கப் பிராமணர்கள் அகப்படுவது அருமையாயிற்று. ஒரு அமாவாசையில் நிமிந்திரணம் புசித்தவர்களே மறு அமாவாசையிலும் புசிப்பதுகூடாது என்ற விதியினாலும் பிராமணர்கள் கிடைப்பதில்லை. அநேக ரிஷிகள் உபவாசமிருப்பதும் காரணமாம். பிறகு ரிஷிகள் எல்லாரும் பிரம்மதேவரை அடைந்து இந்தக் கஷ்டத்தை நிவர்த்தியாக்கும்படி வேண்டினார்கள். அவர் ''நீங்கள் எல்லாரும் ஒரே திதியில் சிரார்த்தம் செய்வதால் இந்தக்கஷ்டம் நேர்ந்தது. இன்றுமுதல் அப்படிச் செய்வதை விட்டு இறந்தவருக்கு அவரவர் இறந்ததிதியில் சிரார்த்தம் செய்வதை விதியாகக்கொள்ளுங்கள். அமாவாசைதினத்தில் பிதிர்க்களுக்குத் தவறாமல் திலதர்ப்பணஞ் செய்யுங்கள்'' என்று விதி ஏற்படுத்தி அவர்களை அனுப்பிவிட்டார். ரிஷிகள் மனமகிழ்ச்சியுடன் அப்படியே செய்யத் தொடங்கினார்கள். அதுமுதல் நாலுவருணத்தாரும் தத்தம் பிதிருக்கள் இறந்த தினத்திலேயே சிரார்த்தம் செய்துவருகிறார்களென்று ஸ்ரீ மஹாபாரதம் கூறுகின்றது. அநேக ஸ்மிருதிகளும் கூறுகின்றன. பிதிர்யாகமாகிய இந்தச் சிரார்த்தகிரியையைச் செய்யாமல் விட்டவனைத் தேவர்களும் பிதிர்க்களும் சபிப்பார்கள். அதனால் அவன் இகபரமிரண்டிலும் துன்பத்தையே அனுபவிப்பான். சன்மார்க்கசீலர்கள் இதைவிடாமல் செய்யவேண்டும்.

(தொடரும்) சிவானந்த சாகர யோகீஸ்வரர்.

காலமும் அதன் கோலமும்.

காலத்தின் கூத்தே கூத்து. காலத்தின் கோலமே கோலம். சக்கரம் சுழலுவதுபோல் காலமும் மாறி மாறி வருகிறது. ஒருகால அநாகரீகம் மற்றொருகால நாகரீகமாகிறது. தற்கால அநாகரீகம் முற்கால நாகரீகம். நாகரீகதேசம் அநாகரீகநாடாகிறது. அநாகரீகதேசம் நாகரீகநாடாகிறது. உதாரணமாக எல்லோராலும் போற்றப்பட்டு உலகிற் கிரண்டு கண்கள் போலிருந்த கிரீக், இத்தாலியா தேசங்கள், இக்காலத்து, சண்டை சச்சரவுகளுக் கிருப்பிடங்களாய் எல்லாராலும் எள்ளப்படுகின்றன. நாகரீகமில்லாதவர்கள் வசித்த அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய தேசங்கள் இப்பொழுது லக்ஷ்மியும் சரஸ்வதியும் உறையுமிடங்களா யிருக்கின்றன. என்னே காலத்தின் மாறுபாடு!

நாம் பிறந்த பூமியாகிய இப்பாரதநாட்டில் இக்காலத்தின் கோலத்தை ஆராய்வோம்: கைத்தொழில் கல்விகேள்வி இவைகளிற்சிறந்ததாய்க் குபேர நாடெனப் பெயர்பெற்ற நம் இந்தியாதேசம் பல இடர்ப்பாடுகளுக்குள் அகப்பட்டிருக்கிறது. கல்விக்கும் செல்வத்திற்கும் பிறப்பிடமாயிருந்த பாரதநாடு இப்பொழுது கல்விக்கும் செல்வத்திற்கு மிரக்கும் பூமியாயது. கைத்தொழிலில் முதன்மைபெற்று உலகத்திற்கே திலகம்போன்று இத்தாலிக்குத் துணிமணிகள் அனுப்பிய இந்தியாதேசம் இப்பொழுது உடுத்திக்கொள்ளும் உடைக்கு அன்னியர் கைபார்த்து நிற்கின்றது. என்னே காலத்தின்கோலம்! இந்தியாவின் தற்காலநிலைமையும், முற்காலநிலைமையும், கல்வி, செல்வம், கைத்தொழில், ஒழுக்கம் முதலிய துறைகளில் ஊன்றிப் பார்ப்போமாயின் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

'இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை, எல்லாருஞ் செய்வர் சிறப்பு' ஆதலால் 'இந்தியாவின் செல்வமே முதலாவது நாம் கவனிக்கத் தக்கது. நீர் நில வளப்பங்கள் நிறைந்து, குன்றின்மேலேற்றிய விளக்குப்போல் பிரகாசித்த இந்தியாவின் தற்காலநிலைமை பரிதபிக்கத்தக்கது. கோகினூர் வயிரமும், மயில் சிம்மாசனமுமிருந்த இந்தியா இப்பொழுது அன்னியதேசத்தவரால் அவமதிக்கக்கூடியதா யிருக்கிறது. மேலும் தேசத்தின் வறுமையினால் சுதேசிகள் கைத்தொழில், இயந்திரத்தொழில் முதலியன இயற்றத் திறனற்றவர்களாயினர். இதரநாட்டார் நூல் யந்திரம், அரிசி யந்திரம் முதலிய யந்திரங்களை ஏற்படுத்தி, அவற்றின்மூலம் இங்குள்ள பணத்தைத் தங்கள் நாட்டுக்குக் கொண்டுபோகின்றனர். அயல்நாட்டுக் கனவான்கள் பலர்வந்து இங்கு இருப்புப்பாதை முதலியன அமைத்து நமக்குச் சௌகரியம் உண்டுபண்ணித் தங்களுக்கும் பணச்சௌகரியம் செய்துகொள்கின்றனர். இவ்வாறு நம் தேசத்தின் செல்வம், மேன்மேலும் வெளிச் செல்கின்றதேயொழிய இதற்கு வரவொன்றையும் காணோம். ஆதிகாலத்திலோ இந்தியா வியாபாரத்தில் மேன்மைபெற்றுக் கடல் கடந்து யவனர், உரோமர்களுடன் வியாபாரஞ்செய்து அவர்கள் பணத்தை ஏராளமாக வாரிவந்தது.

இந்தியாவின் செல்வவளம் குறைந்ததற்குக் காரணம் நாம் கைத்தொழிலிலும், வியாபாரத்திலும் கவனம் செலுத்தாதிருப்பதே. சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்புகூட இந்தியாவிலிருந்து டெக்காமஸ்லின் முதலிய விலைமதித்தற்கரிய துணிகள், முத்துக்கள், தந்தங்கள், ஆகியவை இத்தாலி, கிரீக் முதலிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அங்கிருந்து அவைகளுக்குப் பதிலாக வெள்ளி, தங்கம் முதலியன இறக்குமதி செய்யப்பட்டு இவ்விந்தியநாடு செழிப்புற்றிருந்தது. தற்காலத்திலோ உடுக்கும் உடைக்கும் அன்னியர் கைபார்த்து நிற்கின்றது. நாம் இப்பொழுது கைத்தொழிலை அறவே கைவிட்டோம்.

இவ்வாறு கைத்தொழில் முதலியன க்ஷீணதிசை அடைவதற்குக் காரணம் நாம் கல்வியில் கவனம் செலுத்தாதிருப்பதேயன்றி வேறல்ல.

முற்காலத்தில் கல்விக்களஞ்சியமாகிய நம்நாட்டில் யவனர், அராபியர், எகிப்தியர் முதலியோர் இலக்கியம், கணக்கு முதலியன கற்றுப்போயினர். தற்காலத்தில் நாம் கற்கும் கல்வி ஒன்றிற்கும் உபயோகமாகாதது. நாம் கற்கும் கல்வி தாய்ப்பாஷையுமல்ல, தேசீய பாஷையுமல்ல; நெல்லிருக்கப் பதரைக் கற்கிறோம். துரைத்தனத்தாரிடத்தில் வேலைக்கமர்ந்து அளவற்ற பொருள் திரட்டலாமென்னு மெண்ணத்தோடு அரசாங்கக் கல்வி கற்கிறோம். வீட்டிலிருக்கும் பொருளைக்கொண்டோ அல்லது கடன்பட்டோ B.A, M.A, முதலிய உயர்தரப்பட்டங்கள் பெற்று நாம் கனவுகண்ட அரசாங்கவேலையும் கிடைப்பதின்றிப் பிழைப்பதற்கு வீட்டில்பூஸ்திதியுமின்றி, 'வாய்த் தவிடும்போய் அடுப்பு நெருப்பு மிழந்தவன்' போல் திண்டாடுகிறோம். கைத்தொழில் ஏதாவதுசெய்து வயிறு வளர்க்கலா மெனிலோ, நாம் கற்கும் கல்வியால், சேக்ஷ்பீயர், மில்டன் முதலியோ ரியற்றிய காவியங்கள் நமக்குத் தெரியுமேயன்றி, கைத்தொழில் கற்பிக்கப்படாததால் அத்தொழிலும் செய்யத் தெரியாது. இதனால் நாம் குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசினவர்களாகிறோம்.

நம் நாட்டின் கல்வியும் கைத்தொழிலு மிவ்வாறிருக்க, நம் நாட்டின் விவசாயத்தைப்பற்றிச் சிறிது கவனிப்போம்: முற்காலத்தில் பயிர்த்தொழிலாளர் தங்கள் தொழிலை மிகவும் கௌரவமாய் மதித்து நன்றாய்ப் பாடுபட்டு வந்தனர். அக்காலத்து வேந்தர்களும், "சீரைத்தேடின் ஏரைத்தேடு" என்ற பழமொழிக்கிணங்க அவர்களை மிக அன்போடும், ஆதரவோடும் நடத்திவந்தனர். அத்தகைய உழவுத்தொழில் இப்பொழுது தாழ்மையாகக் கருதப்படுகின்றது. 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந், தொழுதுண்டு பின்செல்பவர்' என்ற பொய்யாமொழிப்புலவர் வாக்கும் இக்காலத்துப் பொய்த்துப்போயிற்று. வேளாண்மை கேவலமான ஓர் தொழில் என்னும் எண்ணம் ஒவ்வொருவரிடத்தும் நாளுக்கு நாள் பலமாக வேரூன்றி வருகிறது. சம்சாரிகள் வயல்களைத் தாங்களே நேரில் போய்ப் பார்ப்பது கேவலமென்று நினைத்தோ அல்லது சோம்பலினாலோ தங்கள் நிலங்களைக் கட்டுக் குத்தகைக்கு அடைத்தோ, அல்லது தாங்கள் போகாமல் வேலையாட்களை அனுப்பியோ அவர்கள்மூலம் பயிர் செய்கிறார்கள். கூலியாட்கள் நிலங்களை நன்றாய் உழாமலும், அவற்றிற்கு உரம் வைக்காமலும், புதியவிவசாயமுறைகளைக் கைக்கொள்ளாமலும் பயிரிட்டுத் தங்கள் சம்பளத்தில் மாத்திரம் கண்ணாய்க் கணக்குவிடாமல் அறைக்கொள்கிறார்கள். நிலம் காலாகாலத்தில் உரம் வைக்கப்படாததால் நிலத்தின் விளைபொருளும் கம்மியாகிச் சீக்கிரத்தில் நன்செய்யும் தரிசாகிறது. இங்ஙனம் உழவர் தரிசை, நன்செய்யாக்குவதல் [illegible] தரிசாக்குகின்றனர். வேளாண்மையே நாட்டின் [illegible] என்பதை மறந்த இவர்கள்தம் மதி என்னே! [illegible] செல்வம் கோழைபடாது" என்பதை இவர்கள் அறியாதது [illegible]! அரசாங்கத்தார், நாடு செழிப்புற விவசாயம் முக்கியமென்ப[illegible]க் குடிகளுக்குக் காட்டு[illegible]

16983
சென்னை 600 008

பொருட்டு ஆங்காங்கே (Agricultural Farms) விவசாயப்பண்ணைகள் ஏற்படுத்திப் புதுமாதிரி உழுது பயிர்செய்யும் முறையைக் கற்பிக்கின்றனர். நம் நாட்டார் இவைகளைக் கவனித்து அந்தப்படி பயிர்செய்கின்றார்களில்லை யாதலால் நம் அரசாங்கத்தார் முயற்சியெல்லாம் விழலுக்கிறைத்த நீராகின்றது. இனியாவது நம்மவர் வேளாண்மையைக் கவனித்த லவசியம்.

மேற்கூறியவைகளன்றி நம் நாட்டின் ஒழுக்கமும் சீர்கெட்டு இருக்கிறது. "ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம், உயிரினு மோம்பப்படும்" என்ற முதுமொழியை நம்மவர் மறந்தனர் போலும். இந்தியர்கள் செங்கோல் செலுத்தியகாலத்தில் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு வருணத்தாரும் தங்கள் ஜாதிமுறை வழுவாது, பிராமணர் வேதமோதியும், க்ஷத்திரியர் நாட்டைப் பரிபாலனஞ்செய்தும், வைசியர் சூத்திரர் முறையே வாணிபமும் வேளாண்மையும் செய்தும் வந்தனர். இக்காலத்தோ எல்லாம் தலைகீழாக நடக்கின்றன. அந்தணர், "மறப்பினு மோத்துக்கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்" என்ற வள்ளுவர் வாக்கை மறந்து தங்கள் பிறப்பொழுக்கத்தைக் கைவிட்டுக் கள் முதலியன குடிக்கின்றனர். "அந்தணரென்போர் அறவோர், மற்றெவ்வுயிர்க்குஞ், செந்தண்மை பூண்டொழுகலான்" என்னும் குறள் இக்காலத்திய பிராமணர்களுக்குப் பொருந்தாது. அந்தணர் வேதமோதுவதையும் மறந்தனர். ஈகையை அறவே அகற்றினர். பொய் ஏமாற்றம் தந்திரம் முதலியவைகளுக் கிருப்பிடமாகின்றனர். அநாசாரம் ஆசாரமாயது; ஆசாரம் அநாசாரமாயது.

இனி, நம் நாட்டினரின் தெய்வபக்தியைப்பற்றியும் ஆராய்வாம்: "ஆலயந்தொழுவது சாலவும் நன்று" என்ற ஒளவையார் வாக்கை இக்காலத்தவர் அவமதிக்கின்றனர்; கேவலமாக நினைக்கின்றனர். நம்மால் கோவில்கட்டச் சக்தியில்லையாயினும் நம் முன்னோர் கட்டிவைத்த கோவிலைக்கூடப் பாதுகாக்க நமக்குச் சிரத்தை இல்லை. "கோவிலில் போய்த்தான் கடவுளைக் கண்டுபிடிக்க வேண்டுமோ" என்று சிலர் விதண்டாவாதம் பேசுகின்றனர். இம்மட்டோடு நில்லாமல் கோவில் குளம் செல்வோரையும் பரிகாசம் செய்கின்றனர். நாம் பிரதிதினமும் கோவிலுக்குச் செல்லாவிட்டாலும், திங்களும் வெள்ளியுமாவது சென்று நம் குறைகளையும் நாம் தெரியாமற்செய்த தப்பிதங்களையும் கடவுள்பால் முறையிட்டு அவர் நமக்கு நற்புத்தி புகட்டுமாறு அவரைத் தொழுவோமாயின், நாம் முன்செய்த தப்பிதங்களினின்றும் நீங்கி நம்மால் இயன்ற அறங்களைச்செய்து நம்மைப் பேரின்பவீட்டிற்குப் பாத்திரராக்கிக்கொள்வோம்.

இனி [illegible]ர் ஊணையும், உடையையும்பற்றிய விஷயமும் கவனிக்கத்தக்கதே. [illegible]லத்துத் தென்னிந்தியமக்கள் காலையில் பழையது உண்டு புலஞ்சென்[illegible] வெயிலில் நின்று வேலைசெய்து மாலை திரும்புவர். தற்காலத்தவர்களோ [illegible]குனி, சித்திரைமாதங்களாயினும் படுக்கைவிட்டெழுமுன்னர் காப்பிப்பானம் பருகுகின்றனர்; பின்னர்க் காலைச் சிற்றுண்டி எட்டுமணிக்குக் காப்பியுடன் உட்கொள்கின்றனர். காலைமுதல் மாலைவரை சுமார் 5, 6 தடவைக்குக் குறையாமல் ஆகாரம் சாப்பிடுகின்றனர். இதனால் நோயிடைப்பட்டு வருந்துகின்றனர். "ஒருபொழு துண்பான் யோகியே, இருபொழு துண்பான் போகியே, முப்பொழு துண்பான் ரோகியே" என்றனர் தேரையர். மூன்றுவேளை ஆகாரம் சாப்பிடுகிறவர்களையே ரோகிகள் என்று தேரையர் சொல்லியிருக்க, ஆரோக்யப்பசி, நோய்ப்பசி என்று பசியைப் பகுத்துணராமல் ஐந்தாறுவேளை சாப்பிடுமிவர்கள் பிணிவாய்ப்பட்டுத் துன்புறுவார்களென்பதில் சந்தேகமேயில்லை. "மருந்தெனவேண்டாவாம் யாக்கைக் கருந்திய, தற்றது போற்றியுணின்" என்னும் செய்யுள் இக்காலத்தில் சிறிதேனும், நம்மவரால் கவனிக்கப்படவில்லை. நம்மவர் அணியும் உடையோ நாட்டிற் கேற்றதல்ல. மேல்நாட்டார் தங்கள் குளிர்தேசத்திற் கேற்றவாறு தங்கள் சரீரத்தை உச்சிமுதல் உள்ளங்கால்வரை தொப்பி, கைச்சட்டை, கால்சட்டை முதலியன அணிந்து மூடிக்கொள்கின்றனர். நம்நாட்டிற்கு அவ்வாறணிவது அவசியமில்லை. ஆயினும் நாமும் மேல்நாட்டாரைப்போல அவற்றை யணிகின்றோம். இது நம்தேசத்திற்கு ஒவ்வாததாயிருந்தும் அவர்கள் அணிவதைப்பார்த்து நாமுமணிகின்றோம். இஃது என்ன நாகரீகம்!

இவ்வாறாக நாம், நம் நடை, உடை, பாவனை முதலியவற்றால் மிக க்ஷீணதசை யடைகிறோம். ஒல்காப்புகழும் பல்கும் பெருமையுமுள்ள விவசாயத்தைக் கைவிட்டோம். "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக" என்ற வள்ளுவர் வாக்கை மறந்தோம்; குலமகளைவிட்டு விலைமகளைக் கைக்கொள்வதுபோல் நம் குழந்தைகளுக்குத் தாய்மொழி கற்பித்தலைவிடுத்து வேறுதேச பாஷை கற்பிக்கிறோம். உலகோர் வியப்புற்ற நம் கைத்தொழிலைக் கைவிட்டோம். நம் டெக்காமஸ்லினெங்கே? சிவாஜி முதலியோர் போர்த்திறமை எங்கே? நம் கப்பற்படையெங்கே? யாவும் தூர்க்காலத்திற் கிரையாயின. தானம், தவம், தர்மம், செல்வம் பெருகி உலகத்திற்குத் திலகமாய நம் இந்தியாதேசம் இப்பொழுது உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, கேட்போர் ஏளனம் செய்யும் நிலைமையி லிருக்கிறது. இனியாவது நாம் கைத்தொழில் கல்விகற்று, வேளாண்மையைக் கைக்கொண்டு, உடுக்க உடையும் உண்ண உணவும் தேடிக்கொள்வோமாக. எல்லாம்வல்ல இறைவன் அவ்வாறே அருள் செய்வானாக.

ச. சிவக்கொழுந்து, சிவகாசி.

ஓர் சந்தேகம்.

ஸ்ரீ சீதை, இராவணனுக்கும் மண்டோதரிக்கும் பிள்ளை என்று அநேகர் வற்புறுத்துகிறார்கள். தவிரவும், இது சுப்பிரமண்ய பராக்கிரமத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆதலால் எப்படி? எந்தஜென்மத்தில் அச்

பிறந்தாள்? தவிர படைச்சால் என்ற பெயர் எப்படி வாய்த்தது. அதன் சரியான அர்த்தமென்ன? தயவுசெய்து இவ்வினாக்களுக்கு விடை தரும்படி இவற்றிற்கு விடையனுப்பும் புண்யர்கள்பால் நமஸ்காரம் செய்து கேட்டுக்கொள்ளுகிறேன்.

நா. வீரப்பிள்ளை, பிரைவேட் 'ஸ்கூல்மாஸ்டர்' குவாலாலம்பூர்.

குறிப்பு:—சீதாபிராட்டி பூர்வஜென்மத்தில் வேதம் ஓதிக்கொண்டிருந்த குசத்துவரிடம் தோன்றி வேதவதி என்னும் பெயருடன் வளர்ந்து கொண்டிருந்தனள். குசத்துவசர் இம்மாதரசியை விஷ்ணுமூர்த்திக்கே மனைவியாக அளிக்கவேண்டுமென்றிருந்தனர். தம்பன் என்னும் அரக்கன் தனக்கு இக்கன்னிகை கிடைக்காமையால் குசத்துவசரைக் கொன்று சென்றான். தந்தை யிறந்துபோகவே வேதவதி விஷ்ணுமூர்த்தியைக் குறித்துத் தவம் புரியும்போது, இக்குவிசயத்திற்குவந்த இராவணன் இவளை வலிதிற்பிடிக்க, இவ்வேதவதி "நீ தீண்டிய உடலை நான் வைத்திரேன். நானே உன்குலத்தையும் உன் அரசையும் அழிக்கப்போகிறேன்" என்று தீக்குளித்தனள். பிறகு இவள் இலங்கையில் ஒரு தாமரைப்பொய்கையில் தாமரையிற் பிறந்து, சிவபூசையினிமித்தம் பூக்கொய்யவந்த இராவணன் கண் காண இருந்தனள். இராவணன் இக்குழந்தையை எடுத்துக்கொண்டு போய் மண்டோதரியிடம் கொடுத்து மிக்க அன்பாய் வளர்த்துவர அங்கிருந்த நிமித்திகர் 'இக்குழந்தை இங்கிருந்தால் இலங்கை யழியு' மென்றனர். உடனே இராவணன் அக்குழந்தையை யொரு பெட்டியிலிட்டுக் கடலில் விட்டனன். அது அலையில் மிதந்துவந்து வெள்ளத்தில் மிதிலை நகரிற் புதைந்தது. அத்தருணத்தில் மிதிலை வேந்தனாகிய ஜனகன் யாகஞ்செய்ய உழுத கலப்பையின் நுதிமுனையில் பெட்டிதோன்றத் திறந்து பார்த்து, அதில் இவ்வழகிய குழந்தை யிருக்கக்கண்டு, இவளை அன்புடன் எடுத்து வளர்த்து வந்தனன் என்று கூர்மபுராணம் கூறுகின்றது. ப-ர்.

ஊழ் வலிதா? முயற்சி வலிதா?

ஊழ்:—அதாவது நாம் முற்பிறப்பிற் செய்த நல்வினை, தீவினையாகிய இருவினைகளின் பலனையுங் குறிக்கும் ஓர் பொதுச்சொல்லாம். இதனைப் பெரும்பான்மையோர் வழக்கில் அதிர்ஷ்டம், அல்லது விதி என்றே வழங்குகின்றனர். ஆதலின் யாமும் இச்சொற்களையே உபயோகித்தல் நலம். அதிர்ஷ்டமானது, அதாவது ஒருவர் ஒரு பிறப்பின்கண் எந்த நற்செயல் தீச்செயல் புரிகின்றாரோ, அவ்வினைகளின் பலனானது மறுபிறப்பிலும் அவற்றை நிகழ்த்தியோரையே அடையும். அதினாற்றான் ஒருவர்க்கு இந்நில வுலகின்கண் எத்தகைய நல்வினை தீவினைகளின் பயன் நேரினும் 'விதியின் பயன்' 'விதியின் பயன்' எனவே பலர் செப்புகின்றனர். இங்ஙனம் எவ்வினை நிகழினும் விதியின்பயன் விதியின் பயன் எனவே உரைக்கின்றனராதலின், வினையின் பயனாய விதியினை வெல்லும்வழி ஏதேனும்

உளதா என யோசிப்பாம். அவ்விதியினை வெல்ல முடியுமா? முடியாதா? எனும் எண்ணங்கள் உலகினர் பலரிடத்தும் பற்பலவாறு பதிந்துள்ளன. சிலர் வெல்லமுடியுமென்றும், சிலர் முடியாதென்றும், சிலர் சந்தேகமாகவும் நினைத்துள்ளார்கள். மக்கள் எண்ணங்கள் மாறுபட்டவைகளாயிருக்க, புலவர் எண்ணங்களோ பலவாறா யிருக்கின்றன. ஏறக்குறைய நம்பெரியார் பெரும்பாலரும் சிற்சிலவிடங்களில் விதி வெலற் கரிதென்றே கூறியுள்ளார். அவருள்,

முதிர்தரு தவமுடை முனிவ ராயினும்
பொதுவறு திருவொடு பொலிவ ராயினும்
மதியின ராயினும் வலிய ராயினும்
விதியினை யாவரே வெல்லும் நீர்மையார்.

என, ஓர் பெரியார் கூறியுள்ளார்.

இங்ஙனமே பற்பலவிடத்தும் பற்பலர் பகர்ந்துள்ளார்கள். தெய்வப் புலமைவாய்ந்து, மானிட உடலந் தாங்கிவந்த பொய்யாமொழியாளரும் தமது திருக்குறளில்,

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்"

என விதியின் பயனையே வற்புறுத்திக் கூறியுள்ளார். நாலடியாரில் வரும்,

"பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு"

என்னும் செய்யுளின் கருத்தும் ஒரு பெரிய பசுக்கூட்டத்தின் நடுவில் ஒரு கன்றை விடுப்பின், எங்ஙனம் அது தன் தாயையே நாடிச்சேர்ந்து பால் பருகுகின்றதோ அங்ஙனமே பல மக்கள் குழுமிய இவ்வுலகின்கண் அவரவர் செய்த வினையானது அவரவரையே நாடி யடைகின்றது என்பதை விளக்குகின்றது. அதனால் அனைவரும் அதிர்ஷ்டத்தின் வலிமையையே வற்புறுத்திக் கூறுகின்றனர். ஆயினும் சிற்சில விடங்களில், விதியின் வலியை நம் முயற்சியின் வலியால் சிறிதளவு வெல்லலாம் என்பதற்கு இடம் தரும்படியும் சிலர் கூறியிருக்கின்றனர். 'மதியால் விதியை வெல்லலாம்" என்னும் மூதுரை ஒன்றுண்டு. அதற்கு அத்தாக்ஷியாகப் பதிவிரதா சிரோமணியாகிய சாவித்திரியின் சரிதையுண்டு. அவ்வுத்தமி தனது மரித்த மணாளனை மீண்டும் தன்மதியால் விதியை வென்று உயிர்ப்பித்தனள். இதனால் நாமும் முயற்சியின் வலியால் சிறிதளவேனும் விதியை வெல்லலாம் என்பது பெற்றாம். 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்னும் மூதுரையும் இதனை வற்புறுத்திக் கூறுகின்றது.

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்"

எனத் திருவள்ளுவர் திருவாய்மலர்ந்தருளியதும் நம் விதியின்பயன் எதுவே யாயினும் அதை நாம் நம் முயற்சியின்வலியால் வென்று நலமடையலாம் என்றும், முயற்சிசெய்யாவிடின் துன்பமே யடையநேருமென்றும் தெரிவிக்கின்றது. "முயற்சி, மெய்வருந்தக் கூலிதரும்" என்னும் அவர் வாக்கும் முயற்சிக்குத் தக்க பலனைப் பெறுவோம் என்பதை விளக்குகின்றது. ஆதலின், சகோதர சகோதரிகளே! நமக்கு எப்பேர்ப்பட்ட விதிவலி பெரிதெனினும் அஃதைப் பொருட்படுத்தாது 'மதிவலிது' என்கிறபடி மதியால் மாற்ற முயலுவோமாக.

P. S. அரங்கநாயகி, பூனேமேடு.

குறிப்பு:— "துப்பிதழ் மடந்தை நல்லாய்
தோன்றிய சீவ ரெல்லாம்
இப்புவி யிடத்துச் சால
எண்ணுவ ரெண்ணி யாங்கே
எப்படி முற்றும் முற்று
தெம்பிரான் ஒருவற் கன்றி
அப்படி முற்றிற் கீழ்மே
லாம்பகுப் பிரண்டுண் டாமோ?"

என்கிறபடி 'விதி அல்லது ஊழ்' என்றொன்றிருத்தலினாற்றான் பிரபஞ்ச சிருஷ்டியும் அதன் ஒழுக்காகிய நடைக்குரிய உயர்வு தாழ்வும் ஏற்படுகின்றன. இன்றேல் உலகம் உயிரற்ற பொருட் காட்சிச் சாலையை ஒத்தே விளங்கும். இந்தவிதி மிக்க அதிசயமானது. இதன்தன்மை எவராலும் அறிதற் கசாத்தியமாம்.

"அதிசயம் ஒருவரால் அறியப் போகுமோ
துதியறு பிறவியின் இன்ப துன்பந்தான்
விதிவயம் என்பதை மேற்கொ ளாவிடின்
மதிவலி யால்விதி வெல்ல வல்லமோ"

என்றார் கம்பநாடரும். ஆயினும், நாம் சோம்பலின்றிச் செய்யவேண்டிய முயற்சியைக் கைவிடலாகாது. அம்முயற்சி யதன் அளவிற்குரிய பலனை யளிக்காமற் போகாது.

ப-ர்.

ஆத்திசூடி உதாரணக் கதைகள்.

(313-ம் பக்கத்தொடர்ச்சி)

"பருவத்தே பயிர்செய்"

"பயிர்=பயிரை, பருவத்தே=(உற்பத்திசெய்தற்குரிய) காலத்திலே, செய்=(நீ உற்பத்தி) செய்வாயாக" என்பது இதன்பொருள்.

உலகத்தில் பயிர்த்தொழில் செய்வோரால் உண்டாக்கப்படும் ஒவ்வொரு பயிரையும் உற்பத்திசெய்தற்குத்தக்க பருவம் ஏற்பட்டிருக்கின்றது. எந்தப்பருவத்தில் எந்தப் பயிர் உற்பத்திசெய்தற்குரியதோ அதையே

அதில் உண்டாக்கவேண்டும். அங்ஙனமின்றிப் பருவந்தவறி ஒருபயிரை உண்டாக்கினால், அது விருத்தியடையாது; விசேஷபலனையும் தாராது; சில சமயம் முளைக்காமற் போய்விடுவதுமுண்டு. ஆதலின், உழவுத்தொழிலால் மிக்க பயனடைய விரும்புவோர் பருவத்தில் பயிர்செய்ய வேண்டும்; அவ்வாறு செய்யாதவர், விவசாயத்தால் பயனடைதலின்றித் துன்புறுவர். இவ்வுண்மையை அடியில்வரும் சிறுகதை விளக்கும்:—

சோளம், வரகு, துவரை, மொச்சை முதலிய புன்செய்த் தானியங்கள் பயிரிடுவதற்குச் சில மாதங்களை உரியபருவமென்றும், சிலவகை நெற்களைப் பயிரிடுதற்குச் சில மாதங்கள் தகுமெனவும், இப்படியே வெவ்வேறு வகைப் பயிர்களுக்கு வெவ்வேறுவகைக் காலங்கள் பொருத்தமானவையெனவும் விவசாயிகள், தங்கள் அனுபவத்தால் தீர்மானித்து அக்காலங்களில் பொருத்தமான பயிர்களை உற்பத்திசெய்யும் வழக்கத்தை மேற்கொண்டிருக்கின்றனர். இம்முறையை எல்லோரும் அனுசரிப்பது மரபாயிருப்பினும் சிலர், இதற்கு மாற்றமாக நடந்து கேட்டிற்குள்ளாவதுமுண்டு. ஒரு கிராமத்தில் பட்டந்தவறாமற் பயிர்செய்யும் விவசாயிகள் மிகுந்திருந்தனர். அவர்களோடு விபரீத புத்தியுள்ள ஒருவன் பயிர்த்தொழில் செய்துகொண்டிருந்தான். இவன், நல்லதைக் கெட்டதாகவும், கெட்டதை நல்லதாகவும் கருதும் இயற்கையுடையவன்; உலக இயல் சிறிதுமறியாமல், சகலமுந் தெரிந்தவன்போல் தற்பெருமை பேசக்கூடியவன்; அறிஞர் கூறும் அறவுரைகளைக் கொள்ளாமல் தன் துர்ப்புத்தி சென்ற வழியே செல்லும் மூர்க்கன். ஊரிலுள்ளார் நேரான வழியில் நடந்தால் இவன் அதற்கு மாறான வழியில் நடப்பான். ஒருவருஷத்தில் அவ்வூரில் மழையில்லாமல் பஞ்சமுண்டாகிவிட்டது. அதனால் ஜனங்கள் உணவுப்பொருள்கள் அகப்படாமல் துன்பப்பட்டார்கள். அடுத்தவருஷம் முன்னரே சித்திரைமாதந்தொடங்கி நல்ல மழைபெய்தது. முன் வருஷத்தில் தானியங்கள் கிடைக்காமல் வருந்திய ஜனங்கள் விரைவில் பயன்தரக்கூடிய புன்செய்த்தானியங்களை விதைத்து முன்னரே பயிர்செய்தார்கள். அந்தத் தற்பெருமையுடைய மந்த மதியன்மட்டும், மற்றவர்கள் பைத்தியக்காரத்தனமாக விவசாயஞ் செய்கிறார்களென்றும், தான்மாத்திரம் புத்திசாலித்தனமாக அதைச்செய்யவேண்டுமென்றும் நினைத்து, “இவர்கள் பயிர்செய்வன தாழ்ந்த விலையுள்ள தானியங்கள்; இவை நன்றாக விளைந்தாலும் சென்றவருடத்தில் உண்டான நஷ்டத்திற்கு ஈடுசெய்ய மாட்டா; ஆதலால் நாம் சற்றுப் பொறுமையோடிருந்து இரண்டுமாதங்களுக்குப்பின் பருத்தி சாகுபடிசெய்தால் முன் நஷ்டத்திற்கு ஈடுசெய்யும்படி மிக்க இலாபம் பெறலாம்’’ என்று மனோராஜ்ஜியம்செய்து அப்பருவத்தில் பயிர்த்தொழில் செய்யாமலிருந்துவிட்டான். அவன் பருத்தி சாகுபடி செய்யவேண்டியகாலத்தில் மழை யில்லாமற் போய் ஒருமாதத்திற்குப் பின் பெய்தது. அதனால் அவன் ஒருமாதங்கழித்துப் பட்டந்தவறிப் பருத்தி

சாகுபடி செய்தான். கால்ந்தவறியபடியால் பருத்திப்பயிர் செழிப்பாக உண்டாகவில்லை. அப்பயிர் இளம்பருவமாயிருக்கும்பொழுதே மாரி பொழிதல் மாறிவிட்டது. பருத்திச்செடிகள் பட்டுப்போய்விட்டன. அவன் ஒரு பலனையு மடையாமல் பஞ்சையாய் நெஞ்சங் கலங்கினான். சமயமறிந்து புன்செய்த்தானியங்கள் பயிர் செய்தவர்களுக்கு நல்ல பயன் கிடைத்தது. அவன் பருத்திப்பயிர் செய்யத்தொடங்கிய காலத்திலேயே அவர்கள் வித்தியதானியங்கள் விளைவுக்கு வந்துவிட்டன. அதனால் அவர்கள் முன் ஏற்பட்ட பஞ்சக்கஷ்டம் நீங்கிச் சௌக்கியமடைந்தார்கள்.

அறிஞர் கொள்கைகளை அவமதிக்கும் அந்த அறிவிலி, அம்மட்டோடு சும்மாவிராமல் மேலும் யுத்திசெய்ய ஆரம்பித்தான். அங்ஙனம் ஆலோசிக்கத்தொடங்கி, "நம்முடைய நிலத்தில் ஈரங்காத்துக்கொள்ளும் தன்மையில்லை; அதனாலேயே பருத்திச்செடிகள் பட்டுப்போயின; ஆதலால், அதில் பல தினங்கள்வரை ஈரச்சத்திருக்கும்படி ஒருயுக்திசெய்யவேண்டும்; உப்புமண்ணை நிலமெங்கும் பரப்பிவிட்டால் எப்பொழுதுமே ஈரம் நீங்காமலிருக்கு" மென்று கையிலிருந்த பொருள்களையும் செலவிட்டுத் தன்னுடைய நிலத்தில் அரைஅடி உயரம் உப்புமண்ணைக் கொண்டுவந்து பரப்பி உழுது புரட்டிவிட்டான். அந்த உவர்மண்சேரவே நல்லமண்ணையும் கெடுத்துத் தன்மயமாக்கிவிட்டது. அந்நிலமுழுவதும் உவர்நிலமாக மாறிவிட்டது. அதன்மேல் அவன் அதில் எந்தத் தானியத்தை விதைத்தாலும் முளைப்பதில்லை. அதனால் அவன் அடியோடுகெட்டொழிந்தான். அவ்வூராரெல்லோரும் அவனுடைய மதியற்ற செய்கையை யுணர்ந்து, "அறிஞர் கொள்கைகளை அவமதிக்கும் அகங்காரமுள்ள அறிவிலிகட்குக் கிடைக்கும் பயன் இதுவே" என்று அவனை இகழ்ந்தனர்.

(தொடரும்) செம்பூர்-வீ. ஆறுமுகஞ்சேர்வை.

சகாப்த வருஷங்களின் சந்தேக நிவிர்த்தி.

பஞ்சாங்கங்களில் இவ்வருடங்களின் எண்கள் வித்தியாசமா யிருப்பதைப்பற்றிச் சில நண்பர்கள் சந்தேகங்கொண்டு வினவுகின்றனர். அவர்கள் அடியில்வரும் விஷயங்களால் ஐயம் நீங்குவாராக: அப்தங்களாகிய கலி அப்தம், சாலிவாகன சகாப்தம், பாண்டவாப்தம், விக்கிரமாதித்தாப்தம், போஜராஜாப்தம், கொல்லாப்தம் என்ற கொல்லம் ஆண்டு, பிரதாபருத்திராப்தம், இராமதேவாப்தம், கிருஷ்ணராயாப்தம், கிருஸ்து அப்தம், பசலி, ஹிஜரா ஆகிய இவ்வித வருஷங்கள், கத (இதுவரையிலும் சென்றுபோன) வருஷங்களாகவும், வர்த்தமான (இப்போது நிகழ்கின்ற) வருஷங்களாகவும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. இப்படியிருக்கச் சில பஞ்சாங்கங்களில் கணிதக்காரர்கள் கலியுக௵, சாலிவாகன௵, கொல்லமாண்டு, விக்கிரம௵ முதலிய வருஷங்களைக் கதவென்றும் அல்லது வர்த்தமானம் என்றும் சொல்லாமல், வருஷங்களின் எண்களைமாத்தி

ரம் போட்டுவிடுகின்றார்கள். இன்னுஞ் சிலர் வர்த்தமான வருஷம் என்று சொல்லிவிட்டுக் கதவருஷ எண்களைப் போடுகின்றார்கள். ஆகையால் ஷை வருஷ எண்களில் ஒருவருஷம் வித்தியாசம் நேரிடுகின்றது. கிரகஸ்புட கணிதங்களுக்குக் கத வருஷமும், உலக வழக்கிற்கு வர்த்தமான வருஷமும் கொடுப்பது வழக்கம். கத வருஷத்தைவிட வர்த்தமான வருஷம் ஒன்று அதிகமாக விருக்கும். ஆகையால் குரோதன வருஷத்திற்குக் கத கலியுகவருஷம் 5026ம், வர்த்தமான கலியுகவருஷம் 5027ம், அக்ஷய வருஷத்திற்கு கத கலியுக வருஷம் 5027ம், வர்த்தமான கலியுகவருஷம் 5028ம் ஆகும். இவ்விவரத்தை நண்பர்கள் அறியவும். (நம் ஆனந்தபோதினிப் பஞ்சாங்கத்தில் வர்த்தமான வருஷங்கள் என்று தலைப்பில் சொல்லி எண்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ப-ர்.

சனிபகவான் நிலையும் பஞ்சாங்க வித்தியாசமும்.

சனிக்கிரக நிலையைப்பற்றிப் பஞ்சாங்கங்களில் வித்தியாச மிருப்பதாக ஐயங்கொண்டு சிலர் அதனை நமக்கெழுதி யிருக்கின்றனர். இன்னும் இதைப்பற்றிக் குரோதன வருஷம் மார்கழி மாதம் 29ம் தேதி (12-1-26) சுயராஜ்யா தமிழ்ப் பத்திரிகையில் 4வது பக்கத்தில் 6வது கலத்தில் "சனிபகவான் நிலை" என்று தலையங்கமிட்டு ஒரு வியாசமும் வெளிவந்துளது. அதைப்பற்றிய உண்மையைப் பலரும் அறியவேண்டியது அவசியமாதலின், அடியில்வரும் விஷயங்களால் அதனை விளக்குவாம்:—

மேற்படி வியாசத்தில் சனி விருச்சிகராசிக்குச் செல்ல 21600 கலை செல்லவேண்டுமென்று எழுதியிருக்கிறது. இது பிசகு. விருச்சிகராசிக்குச் செல்ல 12600 கலைதான் செல்லவேண்டும். 21600 கலை என்பது மேஷாதி 12 இராசி அடங்கிய மண்டலத்துக்குரிய மொத்தக் கலை ஆகும். சனி விருச்சிகராசியில் மார்கழி௴ பிரவேசித்துவிட்டதாக நம் ஆனந்தபோதினிப் பஞ்சாங்கம்முதலிய திருக்கணித பஞ்சாங்கங்களில் போடப்பட்டிருப்பது சரிதான்: திருக்கணிதத்திற்கும் வாக்கியத்திற்கும் சில வித்தியாசங்கள் உண்டு:

(1) சூரிய சித்தாந்தத்திலும் வாக்கிய கணனத்திற்கு மூலாதாரமாயுள்ள சித்தாந்தங்களிலும் சொல்லியிருக்கின்ற சனியின் மூல துருவத்திற்கும் சரியான துருவத்திற்கும் வித்தியாசம் சுமார் பாகை 1 கலை 4 வரையிலும் ஏற்படுகிறது. இது ஒரு பிசகு.

(2) நக்ஷத்திரமண்டல கெதி, கால அளவில் சுமார் 6½ நாள் வித்தியாசம். ஆகையால் வாக்கியகணித சனி பரிவிருத்திவாக்கியம் பிசகு.

(3) வாக்கிய கணனத்தில் சனியின் மந்தஜாவாக்கியம் சுமார் 1¼ பாகைவரையிலும் பிசகு.

(4) புஜாகோடி வாக்கியங்கள் மிகவும் துல்லியமாகவில்லை.

(5) சூரியமத்தியிலிருந்து பூமத்தியத்திற்கு மாற்றச்செய்யும் வாக்கிய கணித முறைகளில் பல பிசகுகள் இருக்கின்றன.

(6) ஒவ்வொரு கிரகங்களுக்கும், இதரகிரகங்களினால் உண்டாகும் ககோள சக்தி என்கிற ஆக்கிருஷண சக்தியினால் உண்டாகும் கெதிபேதங்கள் நம் முன்னோர்கள் கண்டு பிடித்து வாக்கிய கணிதத்தில் சேர்க்கப்படவில்லை. இது ஒரு தவறு.

(7) குரு, சனி கிரகங்களுக்குப் பிரத்தியேகமாக அனேக வருஷங்களுக்கு ஒருமுறை ஒழுங்காக ஏற்படும் கதிபேதம் (Long period inequality) நம் முன்னோர்களுக்குத் தெரியாததால் வாக்கியத்தில் சேர்க்கவில்லை. இது ஒரு தவறு. இந்த ஒரு காரணத்தாலேயே மாத்திரம் சனியின் ஸ்புடம் 49 கலை வரையிலும் வித்தியாசப்படும்.

மேலும் ஆரிய சித்தாந்தம், சூரிய சித்தாந்தம், பிர்ம சித்தாந்தம், கிரகலாகவம், சித்தாந்த தத்வ விவேகம், சித்தாந்த சர்வபௌமம் முதலிய முக்கிய சித்தாந்தங்களும், கணக்கிடமுடியாத இதர அனேக சித்தாந்தங்களும், அப்போதைக்கப்போது· கணிதத்திற்கும், திருஷ்டி சோதனைக்கும் (Observation) வித்தியாசம் நேரிட்டு, அவ்வித்தியாசத்தைத் திருத்தும்பொருட்டு ஏற்படுத்தபட்டிருக்கின்றன. ஒரே சித்தாந்தம் எக்காலத்திற்கும் சரியாயிருக்கும்படி ஏற்படுத்தப்பட்டிருந்தால் இதர சித்தாந்தங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாய் இருக்கும்படி உண்டாவதற்குக் காரணமில்லை. மேற்கண்ட சித்தாந்தங்கள் சுமார் 800, 400 வருடங்களுக்கு முந்தி ஏற்பட்டு அதுமுதல் விருத்தியில்லாமல் அப்போதைக் கப்போது வேண்டிய திருத்தங்கள் செய்யப்படாம லிருக்கின்றன. இந்தத் திருத்தங்கள் விஷயமாக மூணம்பண்ணை-கிருஷ்ண ஜோஷியர் தமது பஞ்சாங்ககணனம் முதல்பாகம் 19-ம் பக்கத்தில் "இப்படியாக நம் முன்னோர்கள் அப்போதைக்கப்போதுள்ள கதிகளைக் கண்டுபிடித்துக் கணிதத்தைப் புதுப்பித்து விருத்திசெய்து வந்திருக்க, ஆரியபட்டியம் உண்டான பிற்பாடு அதாவது சென்ற 1380 வருஷங்களாக நம்முடைய கணிதம் விருத்தியின்றி அதே நிலையிலிருக்கின்றது." என்று எழுதியிருக்கின்றார். வாக்கிய கணித நிபுணராய்உள்ள இவரே இவ்வாறு எழுதி இருக்கிறது மிகவும் கவனிக்கத்தக்கது. நம் முன்னோர்கள் கணிதத்திற்கும் திருஷ்டிக்கும் வித்தியாசம் நேரிடும்போது எதுசரியென்று தீர்மானம் செய்யும் விஷயத்தில் (சந்தேகம் நேரிட்டால்) திருஷ்டிதான் சரியானதென்று அங்கீகரிக்கும்படி அறிஞர் தீர்மானித்திருக்கிறார்கள்.

திருக்கணிதமென்பது திருஷ்டி பரிக்ஷைக்கு (Observation)ச் சரியான கணிதம் என்பதாம். இதனாலேயே வாக்கிய கணிதத்தில் வல்லவர்களா யிருப்பவர்கள்கூட திருக்கணித முறையை அநுஷ்டிக்கிறார்கள். மேலும் திருக்கணிதத்திற்கும், வாக்கியத்திற்கும்உள்ள தாரதம்மியத்தை கிரஹணகாலத்தில் எல்லோரும் சுலபமாக அறியலாம்; சென்ற 1921ஆு அக்டோபர்மீ 16உ ஞாயிற்றுக்கிழமை இரவில் நேரிட்ட சந்திரகிரஹணமும், 1924ஆு பிப்ரவரிமீ 20உ புதன்கிழமை இரவில் நேரிட்ட சந்திரகிரஹணமும் வாக்கிய கணிதப்பிரகாரம் கணிதத்தில் சுமார் அரைமணிநேரத்திற்கு மேற்படத் தவறுதலா யிருந்தன. திருக்கணிதப்பிரகாரம் சரியாயிருந்தன. சென்ற சங்கராந்திதினம் நேர்ந்த சூரியகிரஹணத்தைக் கவனித்துப் பார்த்தவர்கள் திருக்கணிதம்தான் விசேஷமானதென்று அறிந்திருக்கலாம். வாக்கியகணிதம் தவறுதலாய் இருக்கிறதென்று அறிந்த சில பஞ்சாங்க கணிதர்கள், தங்கள் வாக்கிய பஞ்சாங்கங்கள் தவறுதலாய் இருக்கின்றனவென்று ஜனங்கள் அபிப்பிராயப்படாமல் இருக்கும்படிக்கு கிரஹணத்தைமாத்திரம் திருக்கணிதப்பிரகாரமும், மற்றவைகளை வாக்கியப் பிரகாரமும் தங்கள் பஞ்சாங்கங்களில் வெளியிடுகின்றார்கள்.

வாக்கிய கணிதர்கள் தங்கள் கணிதத்திற்கு வேண்டிய திருத்தங்களைச்செய்து கணிப்பார்களாக. இவற்றை ஆராய்ந்து நண்பர்கள் திருக்கணிதப்படியுள்ள சனிக்கிரகநிலையே சரியானதென்பதை உணர்வார்களாக.

ப·ரீ.

சொல் வன்மை.

முன் நூலியற்றியாரும் உரைவகுத்தாரும் யாதா மொரு பொருள்பெறற் பொருட்டே முறையே சொற்பொருள்களைத் தத்தம் நூலிடையும் உரைக்கண்ணும் பொன்னெனப் பொதியவைத்துச் சிறந்தோராயினர். அன்னார் அவ்வகையின் மேம்பட்டாராதல்,

"ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி
யம்மூப் பாற்சொல் லுயர்திணை யவ்வே"

(தொல்-சொல்-கிள. 2) என்னும் இச்சூத்திரத்தில் ஆண்மகன் அறிவு முதலியவற்றான் சிறந்தவனுவன் என்பதை அறிவினர் உணர 'ஆடூஉ' வினை முதற்கண் வைத்த துணையானே தெளியப்படும். இத்தெளிவு, திருக்குறட்கண் நாயனூர் மக்களை, "அறிவறிந்த மக்கள்" (புதல். 1) எனலானும் துணியத்தக்கதாம். இவைபோன்ற வெண்ணிறந்த பிரயோகங்கள் பொதுளிய முன்னவர் நூற்கள் புகழப் பெறுவனவன்றித் தம்மைப் பன்முறை புகற்பார்க்குத் தம்மை யியற்றினர் அறிவின் பெருமையினை, நன்கு தெளிவிக்குத் திறத்தனவாயும், நூல் எழுதும் முறைமையினையும் ஒரு பொருள் பற்றிப் பேசும் முறைமையினையும் போதிப்பனவாயு மிலங்குவனவாம். ஆதலின், அவையிற்றினை முறையின் உணர்ந்தார், தாம் சொல்லவல்ல தொன்றனை ஆன்றவர் அவைக்கண் சொல்லுமிடத்து அவைக்குத் தம் மடக்கங்கூறி, அவையியல் புணர்ந்து, கேட்பார்ப் பிணிக்கும் வகையிற் சொல்வனவற்றைச் சொல்முறைமையிற் சொல்லித் தம் மறிவு புலப்படுத்தியவரா யடங்குபவராவர்.

"மேற்கூறியவாறே அறிவானமைந்த ஆன்றோர், தாம் உளராய காலத்தே யன்றித் தமக்குப் பின்னும் தம் புகழுடம்பை நிலவரைக்கண் நிறுவவல்ல நூற்களைச் சொற்பொலிவானும், பொருட்செறிவானும், பொலிந்துதோன்ற வியற்றினர்; அவர் தந்த தண்டமிழ் நூற்கண்காணும் செய்யுட்கள் இத்துறையனாற் சிறந்தன" வென்பது,

"புவியினுக் கணியா யான்ற பொருடந்து புலத்திற் றாகி
அவியகத் துறைக டாங்கி யைந்திணை நெறி யளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்"

(கம்·ஆர·சூர். 1) எனக் கம்பர், கோதாவரியின் சிறப்பினை விளக்குதற்கு அவ்யாற்றினுக்கும் ஆன்றவர் கவியினுக்கும் சிலேடை வகையினிற் பொருள் பயக்கும் இச்செய்யுள் கூறியவதனானே புணரக் கிடப்பதாம். இக் காட்டுச் செய்யுட் கிலக்கியமாம் செய்யுட்கள் பலவற்றை முன்னவர் செய்யுந்திறத்த நுண்ணறிவு பெற்றவரேனும் தம் அடக்கம் கூறா தொழிந்தனரோ? தம்மினும் வல்லுநருளராவரென்ற வுணர்வானும், கூறுதல் இலக்கணமாம் என்னும் அறிவானும்,

"கற்பா லுமிழ்ந்த மணியும் கழுவா துவிட்டால்
நற்பா லழியும் நகைவெண்மதி போல் நிறைந்த
சொற்பா லுமிழ்ந்த மறுவும் மதியாற் கழூஉவிப்
பொற்பா விழைத்துக் கொளற்பாலர் புலமை மிக்கார்"

(சீவ-அவையடக்கம்) எனத் திருத்தக்கதேவர், தம் அடக்கம் கூறியது போன்று ஒவ்வொருவரும் தந்தம் நூற்கண் தத்தம் கருத்துவழி யவையடக்கம் கூறினரன்றே. கூறிய அடிப்பட்ட சான்றோர் நெறிப்பட்டு ஒழுகும் குணத்தவர், அப்பெரியார்தம் ஒழுக்கமாம் அவையடக்கம் கூறுதலையும் தமக்கும் ஒழுக்கமாகக் கொள்ளாதொழிவரோ! ஆதலின் அவைக்கண் ஒன்றனைச் சொல்லப் புகுமெல்லைக்கண் ஒருவர், 'வல்லாதன சொல்லினும் அவற்றை ஆராய்ந்து கொண்மினென அவை யகத்தாரெல்லாருக்கும் வழிபடு கிளவி சொல்லுதல் அவையடக்கு' (தொல்·பொரு·செய்·113. உரை) என்றவாறு அவையடக்கத்தினைக் கூறுவாராதல் வேண்டுவதாகும். ஆகுமது,

"அவையடக் கியலே யரில்தபத் தெரியின்
வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென்
றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே"

(தொல்·பொருள்·செய்·113) என்றது கொண்டும் துணியப்படும். அங்ஙனம் அவையடக்கம் கூறியவழி அவை யியல்பு உணர்தல் வேண்டப்படுவதாகும்.

ஒருவர், ஒரு பொருள்பற்றிப் பேசுவது அவைக்கண்ணே யாதலின் தாம் சொல்வது கேட்கும் அவையி னியல்பினை முன் அறிந்து கோடல்

வேண்டும். அவைதான் புல்லவை, நல்லவை யென விருதிறத்ததாகும். புல்லவையாயின் அது தன் தன்மையினால் சொல்வார் தம் சொற்பொருள்களை யறியாது, சொல்லினாரை யிகழ்ந்துரைக்கும் இயல்பினதாகும். ஆதலின் புல்லவைக்கண் ஒன்று சொல்லினார் அவ்வவையானே இகழப்படுவாராவர். அன்றியும் அவர், நல்லவைக்கண் இருத்தற்குரியாரானும் 'இவன் அவை யறியாது இதுதன்னைச் சொல்லினன். இவன் அறிவிருந்தவாறென்னே!' எனக் குறை கூறவும்படுவார். ஆகவே ஒருவர், புல்லவைக்கண் ஒன்று சொல்லின், அவரை, பொருளறியாமையான் அவ்வவையும், அவை யறியாமைநோக்கி நல்லவையும் இகழ்தலின், தாழ்ந்தாரவைக்கண் ஒன்று சொல்லுதலாகா தென்பது தானே பெறப்படுவதாம். பெறப்படுதல்,

"அங்கணத்து ளுக்க வமிழ்தற்றாற் றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல்."

(குற-அவையறி. 10) என்றதனானும், அதன் உரையில், பரிமேலழகர், 'நல்லார், தம் மினத்தா ரல்லாதா ரவைக்கண் ஒன்றனையுஞ் சொல்லற்க; சொல்லின் அது தூய்தல்லாத முற்றத்தின்கணுக்க அமிழ்தினை யொக்கும்' எனக் கூறுதலானும் தெளியப்படும். நல்லவையோ வெனின் சொல்வார் தமது சொல்லின் திறம்கண்டு மகிழுமாதலின், பன்னூல்களையும் ஆய்ந்து அவற்றின் பயனை யாராய்ந்த கல்வியுடையார், அவ்வவைக்கண் சொல்லுதலானே, அவர்தம் அறிவுடைமை யெல்லார்க்கும் விளங்கித்தோன்றும். தோன்றுதல்,

"கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து"

(குற-அவையறி. 7) என்றதால் அறியத்தக்கதாம். ஆகவே புல்லவை நல்லவைகளின் தன்மை புணர்ந்து நல்லவைக்கண்ணே சொல்லுஞ் சொல் பயன் பெறுவதாதலின் ஒன்று சொல்வார் அவை யியல்பு உணர்வாராதல் வேண்டும். இனி அவையார்ப் பிணிக்கும் வகையில் சொல்வனவற்றைச் சொல்லுந் திறம் பேசுவாம்:

உணர்வார்முன் ஒருவர், ஒன்று சொல்லுதல் அவர்க்குத் தம்மறிவு தோற்றித் தாம் அவரான் நன்கு மதிக்கப்படுவாராதற்காதலின், ஒன்றனைச் சொல்லுமவர்க்குக் கேட்பாரைப் பிணித்தல் அறிவுடையரான் வேண்டப்படுவதொன்றாகும். ஒருவர், கேட்பார்ப் பிணித்தலாவது, அவையகத்தார்தம் உள்ளம் கொள்வன சொல்லுதலானே, அவ்வவையினர் தாம் சொல்வனவற்றை விழைந்து கேட்பாராக அவர்தம் மனம் தம் சொல்வழி தொடரச் சொல்லுதலாம். கேட்பார் மனம் தொடரச் சொல்லுதலாவது, ஒருவர், தாம் கசடறக்கற்றுச் சொல்ல வல்லதொரு பொருளைச் சொல்லுதற்கண் அவையினைநோக்கித் தாம் சொல்லும் ஒவ்வொரு சொல்லினையும் தெளிவாக அவையிலுள்ளார் கேட்கவும், பொருள் தோன்றச் சொல்லொடு சொல்லினைச் சார்த்தியும், அவற்றைக் கேட்பார் தொடர்வாராகவும்,

அவையல் கிளவிகளை யொழித்தும் தம் துணிபுக்கு ஆதாரமான கூற்றுக்களைச் சொல்லுதற்கண் விரைந்து சொல்லுதலை ஒழித்துக் கேட்பார் எளிதிற் கேட்கவும் சொல்லுதலாம். மற்றும் ஒன்றனைப்பற்றியவளவிற் பலபடித்தான அபிப்பிராயபேதங்கள் பல விருத்தல் இயல்பாதலினானும், ஒருவர் சர்வமும் உணர்ந்திருத்தல் கூடாமையானும், ஒருவர்தம் முடிபே பிறர் கொள்ளத் தக்கதெனினும் அம்முடிபினையும் பிறர்கொள்ளும் முறைமையின் கொளுத்தல் வேண்டுதலானும், ஒருவர், கேட்பார் மனம் அழுங்கவும், தம் வீறு தோன்றவும், 'இன்னார் இவ்விடத்துப் பிழைத்தார், இவர் இச் சிறுபொருள் அறியாராயினர், இவர் இதனை உணர்த்தவும் உணராராயினர்' என்ற இன்னோரன்ன பொருள் தருவனவற்றை வெளிப்படையாகவேனும், குறிப்பாகவேனும் ஒருவரைச்சுட்டி, அவர்க்கு இழிவுண்டாக மறந்தும் சொல்லாமையும் சொல்லும் முறைமையின்பாற் படுவதாகும்.

இனித் தமிழினைக் கற்றருட் பெரும்பாலார், ஒரு கூட்டத்தின்கண் சொற்பொழிவு நிகழ்த்துதல் குறித்து ஒரு சிறிது கூறுவாம்: ஒரு சிலர் அவையடக்கம் கூறுங்காலத்தே அது கூறுதல் தமக்கு வேண்டாவென்ற வெண்ணத்தினாலோ, தமக்கு நிகராவார் அவ்வவைக்கண் இலர் என்ற செருக்காலோ கூறியும் கூறாததுமாகக் கூறுவர். சிலர் சொல்வனசொல்லி முடிக்கும்பொழுதில் இரண்டொருவர்க்கே தெரிய முணுமுணுத்துச் செல்வர். மற்றுஞ் சிலரோ கூறுஞ் சிரமத்திற்கே ஆளாகாமல் ஈண்டுக் கூறிய சிலரைநோக்க நல்லவராகி விடுகின்றனர். அவையடக்கம் கூறும் முறைமை இவ்வாறாக, மேல் பேசும் முறைமையினைப் பேசின் அது பேசுந்திறத்தனவிற்படாத முறைமையினதாகும். ஒருவர் அவைக்கண்ணே ஒன்றைப் பேசும் எண்ணத்துடன் வந்திருப்பாராயினும் பேசப்புகுபொழுதில் அந்நோக்கமொழிய, அதுகாலை அவைத்தலைமை வகிக்குமவரையோ, தம்மருகிற் றம்கண்ணிற்குப் புலமாவாராம் இரண்டொருவரையோ நோக்கிப் பேசுவாராகின்றனர். மேல் அவர் சொற்களையெடுத்துச் சொல்லுதலோவெனின் சொல்லுஞ் சொற்கள்தாமும் அவர் தமக்கு அருகில் இருப்பார் தம் செவிக்கே எட்டாமற் போவனவாம். அவர்க்கே அங்ஙனமாயின் எட்டியிருப்பார் தமக்கு அவை எட்டும் தன்மையினைச் சொல்லாமலே ஒழித்தல் நன்றன்றோ?

இனிப் பேசுநர், பேசும் ஆட்சிச் சொற்களைக் கவனிப்பாம்: பேசுநர் தாம் இன்ன வின்ன சொற்களையே யாளுதல் வேண்டும் எனக் கற்றும் கேட்டுமிருப்பாராயினும் பேசுங்காலையில் தம்மனம் போனவாறே,

"அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்"

(தொல்-சொல்-எச். 46) எனும் சூத்திரக் கருத்தும் நோக்காமே இடக்கர் மொழிகளையும், இறப்பவிழிந்த உவமைகளையும் பேசும் பொருளுக் கேலா மேற்கோள்களையும் விரைவின் வாரி யெறிவாராவர். மற்றும் அவர் மேற்கோள் சூத்திரங்களையும் செய்யுட்களையும் தாம் எவ்வளவினும் விரைந்து

சொல்லு மாற்றலுடையார் என்பது ஒன்றே கேட்பார்க்குத் தோன்ற அவையிற்றைச் சொல்லவும் பழகியவராகின்றனர். சொல்லும் பிரயோகங்களின் வார்த்தைகளையும் அடிகளையும் தம்மிஷ்டமேபோலத் திரித்துக் கூறவும் அவர் முற்படுவாராகின்றனர். அவ்வாறு அவர் முற்படுவதற்குக் காரணம், தாம் சொல்வது வேதவாக்கென அவைகொள்ளும் என்ற கொள்கையோ? கேட்பார் அவற்றைத் தேடியாயுந் திறத்தவரல்லர் என்ற கருத்தோ? ஆயார் என்பதோ? பிறிதோ? அதனை அவரே அறிவர் அல்லது பிறர் அறியார். பிறர் அறியும் எண்ணத்தவராயின் அவர் தம் அறிவுக்கு, அவர்தம் செருக்கொன்றே காரணமென்பது புலனாவதாகும்.

சிலர் தாம் கண்டதொரு கருத்திற்குப் பிறர் ஒருவர் கண்டகருத்து மாறுபடுவதாயின், தாம் மற்றொன்றனை விரித்துரைக்கும் அவைக்கண் அக்கருத்தினை எவ்வாற்றலினாலேனும் புகவிட்டு அக்கருத்துடையாரை யிகழ்தலையே பயனாகக் கொள்வர். கொள்ளுமவர் ஒருவர் இல்லாவிடத்து அவரைக் குறைகூறுதற்குப் புகுமுன்,

"அறங்கூறா னல்ல செயினு மொருவன்
புறங்கூறா னென்ற லினிது"

(குற-புறங்-1) என்னு மிதனைக் கருதுவாராயின் குறைகூறுதலான் வரும் பழிபாவங்களுக்கு ஆளாவரோ? தம்மிடத்த குற்றங்களை யாய்ந்து அவை தம்முன் தாம் உளையுந்திறத்தவற்றைப் பிறருங் கூறுவாராவர் என்னும் உணர்வு தோன்றுதலானே அங்ஙனம் பிறரை இகழாமலன்றே ஒழிவாராவார்.

இனி ஒரு சாரார், தாம் ஒன்றில் வல்லுநராயின் தாம் வல்லது அவ்வொன்றே தாம் காணும் எந்நூலினும் உளதாகக்கொண்டு 'இந்நூல் கூறுவதும் இதுவே; அந்நூல் கூறுவதும் அதுவே' எனப் பயன் கூறி முடிப்பாராவர். இவ்வகை முடித்தல்தான், கேட்டார்,

"...............வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல்"

(குற-அவையறி. 4) என்றதுகொண்டு வீணாவிருத்தற் பயனைக் காட்டவல்லதாம்.

இதுவரை கூறியவற்றான், அவைக்கண் ஒன்று சொல்லுதலின் அவ்வவைதான்தரு மேம்பாடுகொள்ள விழைபுநர் அவைக்கு அடக்கங்கூறி, அவைநோக்கிச் சொல்லவல்லவற்றைச் சொல்முறையில் கேட்பார் மனங்கொளச் சொல்வாராயின் தம் விழைவுமுற்றித் தாம் அறியாதனவும் அறிவுடையாரான் அறிந்து மேம்படுவோராவர் என்பது தெளிவாம். இது,

"கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல்"

(குறள்-அவையஞ். 4) என்பதனாற் றேற்றமாம்.

N. திருவேங்கடத்தையங்கார், தமிழ்ப்பண்டிதர்
C. R. C. High School, Purasawalkam.

நடுவெழுத்தலங்கார விடை.

ஆனந்தபோதினி புத்தகம் 11. சஞ்சிகை. 8. பக்கம் 332 ல் வெளியான நடுவெழுத் தலங்காரத்துக்கு விடையாவது :—

விருத்தம்.

சங்கராபரணமதா மிராகத்தின்பேர் தனமாகு மகளிரங்கந் தாணு வூர்தி
பங்கமிலா நந்திசத மோரெண்ணின்பேர் பகர்திருக்கில்லாதான்பேர் சுபோ
[கியாகுஞ்
சங்கையிலாப் புதிதுநூதனமதாகுஞ் சார்முனிவு சினத்தினபி தானமாகும்
அங்கவையு மாரோவென் றயிர்ப்புற்றீரே லானந்தபோதினியா மரிவை
[யாமே.

இராகப் பேர்—	சங்கராபரணம்—	சங்கர்—ஆ—பரணம்.
மகளிர் அங்கம்—		த—ன—ம்
தாணு (சிவன்) ஊர்தி (வாகனம்)—		ந—ந்—தி
எண்ணின் பேர்—		ச—த—ம்
திருக்கில்லான் (குற்றமில்லாதவன்) பேர்—		சு-போ-தி — (சுயாநுபோக [முள்ளவன்)
நூதனப் பேர்—		பு - தி - து
சினத்தின் பேர்—		மு-னி - வு

சங்கராபரணம் முதலியவற்றின் நடு வெழுத்துக்களைச் சேர்க்க "ஆனந்தபோதினி" என்றாகும். இப்பெயரே மேற்படி நடுவெழுத் தலங்காரத்தில் அமைந்ததாம்.

கோபாலகிருஷ்ணய்யர், சந். 4304, மதுரை.

குறிப்பு:—இவ்விடை சரியாயிருக்கின்றது. ஆனால் சிலர் நடுவெழுத்தலங்காரம் மூன்றெழுத்துப் பதங்களில் அமையவேண்டுமென்றும், சங்கராபரணம் மேற்பட்ட எழுத்துக்களை யுடையதாயிருப்பது சிறப்பாகாதென்றும் கூறக்கூடும். இன்னும் இதற்கு "அவிநாசி. வெ. மாணிக்கம்" என்பவரும், தொரவலூர். பாலசுப்பிரமணிய அய்யரும், விடை யெழுதியிருக்கிறார்கள். இவருள் மாணிக்கம் என்பவர் இராகம்—பியாகு என்றும், திருக்கிலான்—சுபோதி என்றும் எழுதுகிறார். பியாகு—மூன்றெழுத்துப் பதமாதலின் பொருத்த முடைத்தென்பது அவர் துணிபுபோலும். திருக்கு—கண் ஆதலால், திருக்கிலான்—என்பதற்குக் 'கபோதி' என்றதும் பொருத்த முடையதே. பாலசுப்பிரமணிய அய்யரவர்கள் எழுதியதில், திருக்கிலான்—கபோதி என்று எழுதியிருக்கிறார்கள்; மற்றவைகளை கோபாலகிருஷ்ணய்யரவர்களைப்போலவே யெழுதி யிருக்கிறார்கள். பின் தபால்களில் தேவகோட்டை சி. டி. சுந்தரராஜய்யங்கார், பறங்கிப்பேட்டை-அ. சுப்பராய செட்டியார், வத்திரா இருப்பு-வெ. கி. இராமசாமி, அவலூர்பேட்டை - பி. கு. இராமலிங்கசெட்டியார், நாமக்கல்-வெங்கட்டரமணஐயர் முதலிய வேறு சிலரும் எழுதியிருக்கிறார்கள். இவர்களுள் ஒருவர் இராகம்—சஹானா வென்றும், மற்றொருவர்—பியாகு என்றும், பின்னொருவர்—வராளி என்றும் எழுதியிருக்கிறார்கள். இவர்கள் குறிப்பிட்ட மற்ற பெயர்கள் 'மாணிக்கம்' என்பவர் எழுதியவையே. இவர்களின்றி இன்னும் சிலரும் பின்னர் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் எழுதியவற்றுள் சில சரியா யிருக்கின்றன. சிலவற்றின் வார்த்தைகளில் சிலபொருந்தாமலிருக்கின்றன.

ப-ர்.

பகவத்கீதை வசனம்.

(328-ம் பக்கத் தொடர்ச்சி.)

சுருதி கூறுவதாவது:—அஞ்ஞானியை ஆற்றியபாவமும் ஆற்றாத அறமும் தாபப்படுத்துவதேபோலப் பிரஹ்மவேத்தாவாய அறிஞன் செய்த பாவமும் செய்யாத புண்ணியமும் தபிப்பியாவாம். இப்பிரஹ்ம வேத்தாவிற்கு மகாப்பிரபாவமுளது, புண்ணியத்தானே மகிழான், பாவத்தானே பரிதவியான், யான் பிரஹ்மரூபனெனப் பிரத்தியக்கபின்னப் பிரஹ்மத்தைச் சாக்ஷாத்கரித்துத் தத்துவவேத்தா புண்ணியத்தோடு பற்றான். நீரிலுறுந் தாமரையிலையை நீர் பற்றாததேபோலத் தத்துவவேத்தாவைப் புண்ணியபாவம் பற்றாவாம். இத்துணையானே இப்பொருள் துணியப்பெறும் :—அகங்காரத்தை யடையாதவனும், மதியிற் பற்றாதவனும் ஆகிய தத்துவவேத்தாவானவன் துர்மதியினும் விலக்ஷணசுமதியாவன். பரமார்த்த தரிசியாய அவன் ஆன்மாவைக் கேவலம் அகர்த்தாவாகவே காண்பன்;ஒருகாலும் கர்த்தாவெனவெண்ணான். அவனுக்குக் கர்த்திருத்துவாதியபிமான மின்மையினானே அநிஷ்ட இஷ்ட மிசிரம் என்னும் மூவகைக் கருமபலத்தை யொருகாலுமடையான். இத்துணையே இக்கீதாசாஸ்திரத்தின் பொருளாம். இப்போது ஸ்ரீபகவான் தத்துவஞானியைத் துதிக்கும் பொருட்டு மொழிந்த அகங்கார அபாவத்தையும் மதிப்பற்றின்மையையும் கூறி யருளுகின்றார்:—தத்துவஞானி எல்லாப் பிராணிகளையும் கொன்றும் கொல்லான்; அதாவது அசங்க ஆத்மா எப்போதும் அகர்த்தா ஆவேன் என அகர்த்தாவடிவத்தின் சாக்ஷாத்காரத்தானே கொல்லுதல் வடிவக் கிரியையின் கருத்தாவாகான்; இதனானே பந்திக்கப்படமாட்டான்=ஹநநரூபக்கிரியையின் காரியரூப அதருமபலத்தோடும் சம்பந்தத்தையடையான். கொன்றும் பந்தமடையான் என்பதனானே ஸ்ரீபகவான் தத்துவசாக்ஷாத்காரத்தின் மகத்துவத்தைத் திருவாய்மலர்ந்தருளினரேயன்றித் தத்துவ வேத்தாவானவன் சர்வப்பிராணிகளையும் கொல்வான் என்பதில் திருக்கருத்தின்றாம். சர்வான்மதரிசியினிடத்தில் எல்லாப் பிராணிகளின் கொலைசெய்தல் சம்பவியாதாம். அவனிவ்வுலகங்களைக் கொன்றும் என்பதனானே தத்துவவேத்தாவின்பால் ஹநநக்கிரியையின் கர்த்தாத்தன்மை கூறியது இலௌகிக திருஷ்டியானேயாம். கொல்லான் என்பதனானே அவனிடத்தே கருத்தாருத்துவ நிஷேதஞ் செய்யப்பட்டது, சாஸ்திர திருஷ்டியினானேயாம். ஆகையாற் கொன்றுங் கொல்லான் என்னும் இரண்டும் முரண்படாவாம். இந்நூலினிறுதியில் ஆன்மாவின்கண் னெல்லாக் கருமங்களின் தீண்டாமை பிரதிஞ்ஞை செய்தருளப்பெற்று, பின்னரும் அதனையே திரப்படுத்தியருளி, பின் அறிஞனுக்குச் சர்வகருமங்களின் அதிகாரநீக்கம் சுருக்கமா யருளப்பெற்றது. அவ்வதிகார நீக்கமே இடையிடையே பிரசங்கத்தை யனுசரித்து வித்தரித்து விளம்பி யருளப்பெற்றது. இத்துணையே கீதாசாஸ்திரத்தின் பொருளாம். இவ்வாறு சாஸ்திரார்த்தங்களின் ஒருமை யுடைமையைக் காண்பித்தருளற்பொருட்டே சருவகரும அதிகாரநீக்கம் உபசங்காரஞ் செய்தருளப்பெற்றது. ஆகையால் இப்பொருளாயது:—அஞ்ஞானத்தினாலே கற்பனை செய்யப்பட்ட அதிஷ்டானாதி 5 அஜன்ம பதார்த்தங்களானே செய்யப்பட்ட விதி நிஷேதகருமங்களெல்லாம் அகம்பிரஹ்மாஸ்மியென்னும் ஆத்மவித்தையினானே மூலசகிதமாய்க் கெடுமாதலினானே பரமார்த்த சந்யாசிகளை அநிஷ்டாதி 3 வகைக் கருமபல மடையாவாம் என அருளியது பொருத்த முடையதேயாம்.

அகர்த்தாவாதியாய ஆன்மாவின் சாக்ஷாத்காரமே பரமார்த்த சந்யாசமாம். இது ஜனகன் அஜாத சத்துருமுதலிய தத்துவவேத்தாக்களாகிய கிருகஸ்தர்களிடத்து மிருந்தது. ஆகையா லவர்களும் பரமார்த்த சந்யாசமுடையவரேயாவர். ஜனகாதி கிருகஸ்த ஞானிகளிடத்தில் அவரது வருணாசிரம கருமம் காணவந்ததாயினும் தத்துவவேத்தாக்களாகிய பரமஹம்ச சந்யாசிகளிடத்தில் நுகர்வினைவயத்தால் பாதித அனுவிருத்திகொண்டேனும், அன்னியரது கற்பனையினாலேனும், பிக்ஷாடனாதிகள் பிரதீதியாவதே போலப் பிரபல நுகர்வினைவயத்தால், கூறிய இருவகைகொண்டு ஜனகாதிகளிடத்தில் கருமங்களின் தரிசனம் முரண்படாதாம். இதனானே, ஆன்மஞான பலபூத வித்வத் சந்யாசஞ் சொல்லப்படும்; சாதனபூத விவிதிஷா சந்யாசமோ முதலி லிவ்வாறுண்டாகாதாயினும் ஞானத்தின் பின் இவ்வாறேயாம்.

[முன்னர் அதிஷ்டானாதி ஐந்தும் சர்வகருமங்களின் ஹேதுவெனக் கூறியருளி ஆன்மாவிற்குச் சர்வகருமங்களின் பரிசமின்மைகூறி யருளப்பட்டது; இப்போது முன்னருளிய பொருளையே ஞானஞேயாதிப் பிரக்கிரியையாக வருணிப்பதுடன், திரைகுண்ய பேதவியாக்கியானத்தானே முன்னினும் விலக்ஷணமுறையாக வருணித்தருளுகின்றார்.]

ஹே அர்ச்சுன! ஞான ஞேய பரிஞாதா வென்னும் மூன்றும் கர்மப்பிரவர்த்தகங்களாம். கரணம் கர்மம் கர்த்தா என்னும் மூன்றும் கர்மாசிரயங்களாம். ஹே கௌந்தேய! வஸ்துவின் உண்மை வடிவத்தை யொளிர்விப்பது ஞானமாம்=பிரத்தியக்ஷாதிப் பிரமாணங்களானே உண்டாய குடமுதலியவற்றின் பிரகாச வடிவக் கிரியை ஞானமென்பதாம். ஞானரூபக்கிரியைக்குக் கர்மபூதமாயகடாதிகள் ஞேயங்களாம். ஞானரூபக் கிரியைக்கு ஆசிரயபூதமும், அந்தக்கரணரூப உபாதியானே நன்கு கற்பிக்கப்பெற்றதும், ஆகிய போக்தா பரிஞாதாவாம். அம்மூன்றும் ஒன்றாகக் கூடியே இஷ்ட அநிஷ்டரூப கருமங்களைத் தொடங்கும்; ஒன்றுகூடாமல் எக்கருமத் தொடக்கமு மிலதாம். ஏனெனின், ஞேயஞாதாக்க ளிருந்தபோதினும் ஞானமிலதாயபோது பிரவிருத்தி யுண்டாகாதாம். ஆகலின் பிரவிருத்தியின்கண் அந்த ஞானத்திற்கு அவசியம் காரணத்தன்மையை யங்கீகரிக்கவேண்டும். ஞான ஞாதாக்க ளிருந்தபோதினும் தேசகாலத்தானே ஞேயர்தடையாயின் பிரவிருத்தி யாகாதாகலின் அதன்கண் ஞேயத்தையும் அவசியம் காரணமெனக் கொள்ளவேண்டும். நித்திரையில் வாசனை வடிவஞான ஞேயங்களிருந்தபோதினும் ஞாதாவில்லாமையின் பிரவிருத்தி உண்டாகாதாகலின், அதன்கண் ஞானத்தையும் காரணமாக அவசியம் அங்கீகரிக்கவேண்டும். ஆகையால் மூன்றும் ஒன்றுசேர்ந்தே சருவகருமங்களையும் தொடங்கும். இப்பொருளை ஸ்ரீபகவான் மூன்றும் கர்மப்பிரவர்த்தகங்களாம் என அருளினர். ஞானாதிமூன்றும் ஒருங்குசேர்ந்தே கருமப்பிரவர்த்தகமாம். அனான்ம பதார்த்தத்தின்கண்ணே பிரேரணியத் தன்மையும் பிரேரகத்தன்மையுமாம். அசங்க ஆன்மாவின்கண்ணே அவ்விரண்டு மின்றாமென் றறிந்துகொள்க. எதன் வியாபாரத்தின் பின்னர்க் கிரியையின் சித்தியாமோ அதுகாரணமாம். அதுவும் உள்வெளி வேற்றுமையானே இருவகையாம். செவி முதலியவையோ வெளிக்கரணமாம். மனாதிகளோ உட்கரணமாம். கர்த்தாவின் கிரியையில் இசையத்தக்க இஷ்டகாரகம் கருமமாம்; அதுவும் உற்பாத்தியம், ஆப்பியம், சம்ஸ்கார்யம், விகார்யம், என்னும் வேற்றுமையானே நான்குவகையாம். அவற்றுள் உற்பத்திக்குத் தகுதியாயது அல்லது யாது முன்னிராது பின்னுண்டாமோ

அது உற்பாத்தியமாம்; முன்னர் இருந்தே அடையப்படுவது ஆப்பியமாம். குணங்கொள்ளல் மலர்தள்ளல் வடிவசமஸ்கார யோக்கியமாயது சமஸ்கார்யமாம்; முன்னவஸ்தையைவிட்டு வேறு அவஸ்தையின் அடைவு விகாரம், அதையடைவது விகார்யமாம்; யூபஸ்தம்பம் உற்பத்தியாக்கலும், தன் வேதசாகைபடித் தடைதலும், நெல்லைப் புரோக்ஷித்துச் சமஸ்கரித்தலும், சோமக்கொடியைப் பிழிந்து விகாரப்படுத்தலும், முறையே இந்நான்கினுக்கும் உதாரணங்களாம். இதரகாரகங்களால் அப்பிரயோஜ்யமும் சகலகாரகங்களின் பிரயோஜகமாயதும் கர்த்தாவாம். அஃதிங்கு சித்தசித்தின் கிரந்திரூபமாய்க் கொள்க. கரணங் கருமம் கருத்தாமூன்றுமே பரஸ்பரம் சமுச்சய பாவத்தையடைந்து கருமசங்கிரகமாம்=கருமங்கலின் ஆசிரயரூபமாம். கரணங் கர்மங்கர்த்தாவென்னும் வசனத்தின் ஈற்றின் இருக்கும் என்னும் என்ற சப்தத்தானே சம்பிரதானம், அபாதானம், அதிகரணம் என்னும் மூன்று காரகங்கட்கும் கரணாதி மூன்றிலே உள்ளடக்கமெனக் கொள்க. நல்ல மேன்மைமதியானே எவர்க்குப் பொருளீயப் பெறுமோ அது சம்பிரதானமாம்; வேதவேத்தாவாகிய மறையவனுக்குக் கோக்கொடுத்தல் உதாரணமாம்; மறையவன் சம்பிரதானமாம். சம்யோக வாயிலாய் விபாகத்தில் அவதியாதோ அதே அபிதானமாம். இமாசலத்தினின்றும் ஸ்ரீ கங்காதேவி யிறங்குதல் போலவாம். பர்வதம் அபாதானகாரகமாம். ஆதாரமென்பது அதிகரணமாம். இவ்வாறு கருத்தா, கருமம், கரணம், சம்பிரதானம், அபாதானம், அதிகரணமாம், என ஆறுகாரகங்கள் இலக்கணநூலிற் பிரசித்தங்களாம். "இந்திரன் ருமலரையைக் காத்தாற் கொய்திறைவனுக்குத் தந்திருங் குற்றத்தினீங்கி விண்மேலிருந்தானெனவும், வர்திங்காரகமெல்லாம்" இவை முறையே யுதாரணங்களாம். சம்பிரதானாதி மூன்றையும் கருத்தாதிகளில் அடக்கி ஸ்ரீ பகவான் கர்த்தாதி மூன்றைக் கூறியருளினர். இவ்வாறு மூவகைத்தகைமையடைந்த காரகமாறன் கூட்டமே சர்வக்கிரியைகளின் ஆசிரயமாம். கூடஸ்த ஆத்மா எக்கிரியைக்கும் ஆசிரயமாகாதாம்; ஆகலின் துணிபு இதுவாம்:—யாது யாது கருமப்பிரேரகமாமோ, ஆசிரயமாமோ, அவையாவுமே காரகரூபமேயாம், திரிகுணான்மகமேயாம். ஆன்மாவோ காரகபாவமற்றதும், முக்குணங்கள் அற்றதும் ஆமாதலின் சர்வகர்மங்களின் பரிசமற்றதாம் என்றறிக.

சிடன்.

அம்பாலிகை அல்லது அதிசய மரணம்

(334-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆனந்த:—"இவையாவும் நான் விபரமாய்க் கூறுகிறேன். அதற்குள் அவசரப்பட்டு என்னை வெளியிட்டுவிட்டால் உன் காரியத்திற்கே கெடுதியாய்விடும்." என்றான்.

அம்பா:—"இதில் ஏதோ பெரிய மர்மம் இருக்கிறது. அமிர்தம்மாள் இதற்கு உடந்தையா யிருக்கிறாள். அவள் உன்னை யொரு சிநேகன் போல் எனக்கு அறிமுகமாக்கி யிருக்கிறாள்" என்னாள்.

ஆனந்த:—"நான் பிரமாணிக்கமாய்க் கூறுகிறேன். நாடோடியைப்போல் வந்தவன் நான்றானென்று அந்தம்மாளுக்கு எள்ளளவுகூடத் தெரியாது" என்றான்.

அச்சமயம் மேல்மாடிக்குச் சென்றிருந்த அமிர்தம்மாள் வந்துவிட்டாள். அம்பாலிகை மர்மத்தை வெளியிட்டுவிடுவாளென்றே ஆனந்தவின் அதற்கு ஆயத்தமா யிருந்தான். ஆனால் அம்பாலிகை அப்படி யொன்றும்

செய்யவில்லை. பேசாமல் தன் வீணையை யெடுத்துக் கையில் வைத்து வாசித்துக்கொண்டிருந்தான்.

புயற்காற்று இடி மின்னல் முதலிய முழக்க மனைத்து மோய்ந்து நிதானமாய் மழை பெய்துகொண்டே யிருந்தது. அம்பாலிகை யவனை நோக்கிப் புன்னகையோடு,

"அய்யா! இப்போது வேறுவழியில்லை, நீர் இரவு என் விருந்தாளியா யிருக்கவேண்டியதே" என்றாள்.

ஆனந்தஸிங்:—வேண்டாம் வேண்டாம்; நான் போய்விடுவேன்.

அம்மாது.—"போக முடியாது. பாதை முழுமையும் வெள்ளம் நிறைந் திருக்கும். தற்செயலாய் வந்து சிக்கிக்கொண்டபின் இந்த ஒரு இரவு மட்டுமேனும் நமது விருந்தாளியாய் இருந்தே தீரவேண்டும்" என்றாள்.

கடைசியில் ஆனந்தஸிங் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. அவனுக்கு மனதி லென்னமோ தற்செயலாய் அவ்வாறு அங்கு இரவில் தங்கியிருக்க நேர்ந்தது மிக்க சந்தோஷமே. போஜனம் முடிந்து தனக்கு ஆயத்தம் செய்யப்பட்ட அறைக்குள் உட்கார்ந்ததே தன் நிலைமையைப்பற்றிச் சிந்திக்க முயன்றான்.

அவனுக்கு வியப்பும் மிக்க கலவரமுமாகவேயிருந்தன. ஒன்றும் சரியாய் விளங்கவில்லை. அம்பாலிகை சிறைவைக்கப்பட்டிருக்கவில்லையென்று சந்தேகமின்றித் தெரிகிறது. அதிலும் இன்னொரு விசேஷம். அவள் மிக்க மன நிம்மதியோடு சந்தோஷமாகவே யிருக்கிறாளன்றி இத்தகைய பெரிய ஆபத்தில்சிக்கி யிருப்பவளாகவும் மாண்டுபோனாளென்று சுடலையில் புதைக்கப்பட்டு மறுபடி வெளியில் கொண்டுவரப்பட்டவளாகவும் சற்றேனும் தெரியவில்லை. ஆதலால் இதில் இன்னும் நமக்கு விளங்காத பெரிய மர்மம் எதுவோ விருக்கிறதென்று அவனுக்கு விளங்கியது.

அங்கு வரும்போது அவன் எண்ணிக்கொண்டு வந்ததாவது:—"நாம் அப்பெண்ணைக் காணவேண்டியதே பாக்கி. 'நான் உன்னை விடுவித்துக் கொண்டுபோக வந்தேன்' என்றுமட்டும் கூறிவிட்டால் உடனே அவள் நம் கூடவே வந்துவிடுவாள்" என்பதே. கடைசியில் இப்போது பார்த்தால் அம்பாலிகை மிக்க சாமார்த்தியமும், தைரியமும், ஆழ்ந்த யோசனையும், நிதானமும், மனதிலுள்ளதைச் சற்றும் வெளியிடாது மறைத்து வைத்துக்கொண்டிருக்கும் வல்லமையும் உடையவளா யிருக்கிறாள்.

ஆனந்தஸிங் யாவும் சிந்தித்துப்பார்த்துக் கடைசியில் "நாம் இப்போது வாயைத் திறக்கலாகாது; இங்கிருக்கிற மர்மத்தை முன்னே யறிந்துகொள்ளவேண்டு" மென்று தீர்மானித்துக்கொண்டான். அவன் எவ்வளவோ ஆச்சரியமான குற்றங்களையெல்லாம் பார்த்திருக்கிறான். அம்பாலிகையின் சொத்தைக் கறுப்பண்ணன் அபகரிக்கமுயன்றது சாதாரணமாய்ச் சம்பவிக்கிற குற்றமே. ஆனால் மோசத்திற்குள்ளான ஆசாமி தனக்குத் தீங்கிழைத்தவர்கள் கூட்டத்திலேயே கூடிக்கொண்டு தனக்கொரு கெடுதியும் சம்பவியாததுபோல் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் இருப்பதுதான் பெரிய வியப்பாயிருந்தது.

அன்றிரவு முழுமையும் அவனுக்குச் சற்றேனும் நித்திரை பிடிக்கவேயில்லை. மறுநாட்காலை யெழுந்ததும் குளிர்ந்த காற்றில் சற்று உலவலாமென்று தோட்டத்திற்குள் பிரவேசித்தான். சற்றுதூரம் சென்றபின் தற்

செயலாய்த் திரும்பிப் பார்த்தபோது யாரோ ஒரு ஸ்திரீ வருவதாய்த் தெரிந்தது. அங்கே நின்று உற்றுப்பார்த்தான். வருவது அம்பாலிகையென்று அறிந்ததே அங்கேயே நின்றான்.

சற்றுநேரத்திற்குள் அம்பாலிகை அவனருகில் வந்ததும் வந்தனமளித்து அங்கு அடர்ந்த புஷ்பச்செடி கொடிகளின் மறைவில் இருந்த ஒரு பலகை யாசனத்தைக்காட்டி "வாரும்; இங்குவந்து உட்காரும்" என்றாள்.

ஆனந்தஸிங் அவ்வாறே யுட்கார்ந்ததும் "இனியொளிக்காமல் நீர் இங்குவந்த விஷயத்தை விவரமாய்க்கூறும்" என்றாள். அதன்மேல் இருவர்க்கும் கீழ் விவரித்தபடி சம்பாஷணை நடந்தது:—

ஆனந்த:—நான் உன்னைக் கண்டுபிடிக்கவே வந்தேன்.

அம்பாலிகை:—அது எனக்குத்தெரியும். உம்மை யார் அனுப்பியவர்?

ஆன:—பவானியம்மாள்.

அம்:—அது பொய்.

ஆன:—இல்லை. முழுதும் உண்மை.

அம்:—நீர் ஒரு உளவாளி.

ஆன:—ஆம்; என்தொழிலே உளவுகண்டு பிடிக்கும்தொழில்.

அம்:—அப்படியாயின் நீர் ஒரு துப்பறியும் உத்தியோகஸ்தரோ?

ஆன:—ஆம்.

அம்:—அப்படியானால் என்னைக் கொல்ல முயற்சி நடந்தது உமக்குத் தெரியும்?

ஆன:—இல்லை, தெரியாது. ஆனால் உன் விஷயமாய் நடந்த ஆச்சரியமான சம்பவம்மட்டும் எனக்குத் தெரியும். நீ இறந்துபோனதாக எண்ணப்பட்டுச் சவப்பெட்டியில் வைக்கப்பட்டிருந்தபோது உன்முகத்தைக் கண்டேன்.

(தொடரும்) ஆரணி-குப்புசாமி முதலியார்.

பொது சமாச்சாரங்கள்.

ஓரதிசயப்பிறவி:—ஆனைமலை, R. கோபால முதலியாரின் வேலையாள் மொட்டையண்ணன் வீட்டில், 13—2—26 ல், ஒரு கோழி, சிரசு முதல் கழுத்துவரையில் ஒரே பாகமாகவும், மற்ற பாகம் இரண்டாகவுங் கொண்டு, இரண்டு சிறகுகளும் நான்கு கால்களுமுள்ள குஞ்சு ஒன்றைப் பொரித்திருக்கிறது என்று நமது ஆனந்தபோதினியின் 17880-நெம்பர் சந்தாதார்; ஆனைமலை, A. S. பால வெங்கடராம் செட்டியார் எழுதுகிறார்.

கொசு உபத்திரவ நிவர்த்தி:—வீட்டைச்சுற்றித் துளசிச் செடிகளை வளர்த்துவந்தால் கொசுக்களின் உபத்திரவம் இராதாம். இச்செடிக்கு ஜுரம் வராமற்செய்யுங் குணமும் உண்டாம்.

பிரசவ விநோதம்:—திருநெல்வேலிக்கு மேற்கேயுள்ள [illegible]லூரில் ஒரு வீட்டில் ஒரேநாளில் நான்கு பிள்ளைகள் பிறந்து இரண்டு உயிரோடிருந்தனவாம்.

நாய் வயிற்றில் ஆனைக்குட்டி:—பர்மாவில் [illegible]வாடி ஜில்லாவில் தொவுஞ்சையில் ஒரு நாய் யானைக்குட்டியை ஈன்றது. குட்டி ஆறுமணி நேரம் உயிரோடிருந்ததாம். அந்தக் குட்டியைத் திராவகத்தில் விட்டு வைத்திருக்கிறார்களாம்: குட்டி யானைக்குட்டிபோலவே யிருக்கிறதாம்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

அக்ஷய௵ சித்திரை மூ—கலியுகாதி 5028, சாலிவாகனம் 1849
பசலி 1335—கொல்லமாண்டு 1101—ஹிஜரி 1344,
இங்கிலீஷ் 1926௵ ஏப்ரல்மூ—1926௵ மேமூ

தேதி	ஏப்ரல்	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	13	செவ்	பிர24-57	அஸ்30-25	சித்60	வருஷப்பிறப்பு, யுகாதி பண்டிகை
2	14	புத	துதி20-20	ப※27-43	சி27-43அ	கிருத்திகை விரதம்
3	15	வியா	திரி17-18	கிரு26-43	மர60	ஆண்டோளன் திரிதியை
4	16	வெ	சது16-13	ரோ27-35	ம27-35சி	மாசசதுர்த்திவிரதம்
5	17	சனி	பஞ்17-8	மிரு30-28	சித்60	சஷ்டி, கதிருக்க
6	18	ஞா	சஷ்19-53	திரு35-20	சித்60	கரிநாள், கங்கோற்பத்தி
7	19	திங்	சப்24-30	புன41-38	அ41-38சி	சிமந்தம், காருத்த
8	20	செவ்	அ30-20	பூசம்49-5	சித்60	அசோகாஷ்டமி
9	21	புத	நவ36-43	ஆயி56-45	சித்60	ஸ்ரீராமநவமி, ஸ்ரீராமஜெ
10	22	வியா	தச43-8	மக60	அமி60	தர்மராஜ தசமி [யந்தி
11	23	வெ	ஏ48-43	மகம்4-20	ம4-20சி	சர்வ மத்வ ஏகாதசி
12	24	சனி	து53-23	பூரம்11-8	சி11-8ம	வாமன தமன துவாதசி
13	25	ஞா	திர56-50	உத்16-50	அமி60	பிரதோஷம்.
14	26	திங்	சது58-50	அஸ்21-13	சி21-13பி	வியாதியஸ்தர் குளிக்க
15	27	செவ்	○59-43	சித்24-20	சித்60	கரிநாள், சித்ரா பௌர்
16	28	புத	பிர59-8	சுவா26-10	சித்60	சைத்திரபகுளம் [ணமி
17	29	வியா	து57-43	விசா26-58	சித்60	கதிருக்க [ய்ய
18	30	வெ	திரி55-20	அனு26-48	சி26 48ம	திவேஷகம், பும்சவனம்செ
19	1 (1926௵ மே)	சனி	சது52-15	கேட்25-53	சித்60	
20	2	ஞா	பஞ்48-37	மூலம்24-20	அ24-20சி	
21	3	திங்	சஷ்44-25	பூரா22-8	மர60	
22	4	செவ்	சப்39-40	உத்19-28	அ19-28சி	
23	5	புத	அ34-33	திரு16-23	சி16-23பி	
24	6	வியா	நவ28-55	அவி12-48	சி12-48ம	
25	7	வெ	தச23-3	சதை8-55	சித்60	
26	8	சனி	ஏகா17-3	பூரட்4-53	ம4-53சி	
27	9	ஞா	து11-10	உத்0-48 ரேவ57-3	அமி60	
28	10	திங்	திர5-33	அஸ்53-53	சித்60	மாசசிவராத்திரி
29	[illegible]	[illegible]	சது0-40 [illegible]56-33	பர51-45	சித்60	அவமாகம், சர்வத்திர அமாவாசை
30	12	[illegible]	[illegible]-3	※50-45	அ50-45சி	கிருத்திகை விரதம்
31	13	வியா	[illegible]50	ரோ51-15	மர60	சந்திர தெரிசனம் 4-ம் பிறைபோல் தோற்றும்

புத	குரி		ரா
சுக்	10உ கும்-குரு 12,, கும்-செ 17,, மீன-சுக் 26,, மே-புத		
குரு செ			
கே	சனி		

Printed & Published by N. Munisawmi Mudaliar At The "Ananda Bodhini" Power Press, 15, Venkatesa Maistry St., Madras.

169837
[illegible] 600 008

அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற (ரிஜிஸ்டர்ட்)
"சகுந்தலா" கூந்தல் வளரும்
பரிமளத் தைலம்

அழகுக்கு எண்ணெய் அடங்கிய

புடன் 1-க்கு அணா 12

இத்தைலத்தின் மனோஹரமுடைய பரிமளம் சொல்லமுடியாது தலையில் தடவி சீவிக்கொண்டால் அக்கம் பக்கம் வீடுகளுக்கும் இதின் வாசனை வீசும். கூந்தலை நீளமாக வளரச்செய்யும். மூளையின் கொதிப்பைத் தணியச்செய்யும். கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல வியாதிகளையும் நிவர்த்திசெய்யும் கண்ணில் நீர்வடிதல், தலையில் புண், மயிர் வெடிப்பு, மயக்கம், தலைச்சுற்றல், தேக நமைச்சல், சொறி, சிரங்கு, கற்றாழை நாற்றம், மனோ வியாகூலம் ஞாபகமறதி இவைகளைப் போக்கடித்து தேக ஆரோக்கியத்தைத் தந்து வாசனையை உண்டாக்கும். முகதேஜஸ் உண்டாகும். உயர்ந்ததைலம். சிலர்கோரியபடி அனேக திவ்விய வனமூலிகைகளால் சாஸ்திரப்படி தயார்செய்து ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ளது. ஒரு டின் தைலம் வாங்கிப் பார்த்தால் அருமை பெருமை விளங்கும்.

கிருஷ்ண சஞ்சீவி

தலைநோய், பாரிசவாய்வு, சுளுக்கு, புண்கள், காயங்கள், வீக்கங்கள், கொப்பளங்கள், கட்டிகள், இருமல், மூச்சடைப்பு, தேள் கொட்டின விஷம் இவைகளுக்குத் தேவதாப்பிரசாதம் நோய்கண்ட இடத்தில் இந்த கிருஷ்ண சஞ்சீவியை நன்றாய் இரண்டு மூன்று நிமிஷம் தேய்த்தால் பாதைகள் மாயமாய் ஓழிவிடும். இளங் குழந்தைகளுக்குக் காணும் சைத்திய நோய்களுக்கு உபயோகிக்கலாம். ஆயிரக் கணக்காகச் செலவழிந்துகொண்டு வருகிறது. ஒவ்வொரு குடும்பத்திலும், பிரதி பிரயாணிகள் கையிலும் இந்த கிருஷ்ண சஞ்சீவி இருந்தே தீரவேண்டும்.

இதன்விலை புட்டி 1-க்கு அணா 8. டஜன் 1-க்கு ரூபா 5.

விலாசம்:- தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஆனந்தபோதினி

காகித விலையால் சொல்ப பிரதிகளே மிஞ்சும்படி நேரிட்டது.

இப்போதிருப்பவை மிகச் சொற்ப பிரதிகளே

ஆனந்தபோதினி 3-ம், 5-ம், 6-ம், 7-ம், 8-ம், 9-ம், 10-ம் வருஷ புத்தகங்கள்

முழு காலிகோவில் நேர்த்தியாக பைண்ட் செய்யப்பட்டவை.

புத்தகசாலைகளை அழகுபடுத்தத் தகுதியானவை. பல அரிய விஷயங்கள் அடங்கிய இப்புத்தகங்கள் எப்போதும் சிறந்த நூல்கள்போல் உபயோகமாயுமுள்ளன என்ற விஷயம் யாவருமறிந்ததே. ஒவ்வொன்றும் சுமார் 500-பக்கங்கள் அடங்கியது.

ஒவ்வொன்றும் விலை ரூபா 1-6-0; தபால் கூலி பிரத்யேகம்.

ஒரு வருடத் தனி சஞ்சிகைகள் 12-ம் விலை . .ரூ1-0-0; தபால் கூலிவேறு

1-வது வருஷ பைண்ட் புத்தகம் விலை ரூ. 1-12-0; தபால்கூலி வேறு.

Printed & published by N. Munisawmi Mudaliar, at the

"Ananda Bodbini" Power Press,

16. Venkatesa Maistry Street, Sowcarpet, Madras.